நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

for young friends of fmpb

இளைஞர் மாத இதழ்



# வெற்றிக் காண வா!

Vol 25-Issue 04 - Apr - 2025

Private circulation only

A monthly Prayer Bulletin for **Youth & Teens**

# வெண்கலக்கல்

# THE LAVER OF BRONZE



Rev. Selvinraj G Charles



அன்பு வாலிபர்களே, இயேசுவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். இந்த மாதம் வெண்கலக் கல்லின் (The Laver of Bronze) மேன்மையை அறிந்து, அதன் மூலம் ஜீவனுள்ள தேவனை ஆராதனைச் செய்து துதிக்கப் போகின்றோம்.

இந்த வெண்கலக்கல் இரும்பை விட, செம்பை விட கெட்டியானது. பண்டைய காலத்தில் ஆயுதங்கள் செய்ய வெண்கலக்கல்லைப் பயன்படுத்தினர். நாமும் வெண்கலத்தைப் போல் ஆண்டவரை உறுதியாக தொழுதுகொள்ள வேண்டும். இது ஆசரிப்புக் கூடாரத்தின் வாசஸ்தலத்தின் வெளிப்பிரகாரத்தில் வைக்கப்பட்டிருக்கும்.

### ஞானஸ்நானத்திற்கு அடையாளம்
### (Bronze Stone Symbolizes Baptism):

திருவசனத்தைக் கொண்டு தண்ணீரில் மூழ்கினால் நாம் சுத்திகரிக்கப்பட்டு பரிசுத்தமாகின்றோம். ஞானஸ்நானம் நம் பாவ அழுக்கைக் கழுவுவதற்கு அடையாளமாக இருப்பது போல், வெண்கலத் தொட்டி ஆசரிப்புக் கூடாரத்தின் முன் வைக்கப்பட்டு, உள்ளே வருகின்றவர்கள் தங்கள் பாதங்களை மற்றும் கைகளைக் கழுவி உள்ளே வந்து இயேசுவை ஆராதிப்பார்கள். அதைப்போல் நாமும் தேவ வார்த்தையினால் கழுவப்பட்டு, அவருடைய வசனத்தைக் கேட்டு அதன்படி செய்கிறவர்களாகும் பொழுது நாம் சுத்திகரிக்கப்படுகின்றோம்.

### வெண்கலக்கல் மனசாட்சியைப் பூரணப்படுத்தாது
### (Bronze Stone Does not Perfect Conscience):

வெண்கலத் தொட்டியானது, தேவனை ஆராதனைச் செய்கிறவனுடைய மனசாட்சியைப் பூரணப்படுத்தக் கூடாதவைகள். (எபி. 9:9). அந்தக் கூடாரம் இக்காலத்திற்கு உதவுகிற ஒப்பனையாக இருக்கிறது. இதன்படி ஒருவர் செலுத்துகின்ற காணிக்கைகளும், பலிகளும் ஆராதனைச் செய்கிறவனுடைய மனசாட்சியைப் பூரணப்படுத்தாது. நித்திய மீட்பும், மனசாட்சியைப் பூரணப்படுத்துவதும், நமக்கு பரிபூரண ஜீவனைக் கொடுப்பதும் இயேசு கிறிஸ்து ஒருவரால் மாத்திரமே முடியும் (யோவான் 3:3, 5). வெண்கலத் தொட்டியின் நீரானது சரீரத்தின் வெளிப்புறப் பாகத்தை மட்டும் சுத்திகரிக்க உதவும். ஆனால் புது உடன்படிக்கையின் படி நீரானது வெளிப்புறத்தை மட்டுமல்ல, உட்புறத்தையும் சுத்தப்படுத்தி, நம்மை மறுபடியும் பிறந்த ஒருவன் போல் இயேசுவை விடுதலையுடன் ஆராதிக்க உதவும் (எசே. 36:25-30). நம்மேல் சுத்தமான ஜலத்தைத் (இரத்தத்தை) தெளித்து, நம் அசுத்தங்களை அகற்றி நவமான இருதயத்தைத் தந்து, அந்த இருதயத்தில் பரிசுத்த ஆவியை ஊற்றி, எல்லா நியாயங்களையும் கைக்கொள்ளச் செய்வார். அப்பொழுது அவர் நம் தேவனாக இருந்து, பூமியின் நன்மையால் நம்மை ஆசீர்வதிப்பார். நம்மை ஆசீர்வதித்த தேவனைத் துதிப்போமாக.

### பரிசுத்த ஆவியானவர் சுத்திகரிக்கின்றார்
### (The Holy Spirit Purifies us):

பழைய உடன்படிக்கைக்கு கீழ்ப்படிகின்றவர்கள் வெளிப்புறமான எல்லா பாவத்திலிருந்தும் சுத்திகரிக்கப்படுகிறார்கள். ஆனால் போதனைப் பாவம் என்பது வெளிப்பிரகாரமான செயலைக் காட்டிலும், உள்ளான ஜீவியத்தில் தீர்க்க வேண்டியப் பிரச்சனை. உதாரணமாக மத். 5:28இன் படி "ஒரு ஸ்திரீயை இச்சையோடுபார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று" என்றார். இங்குதான் பரிசுத்த ஆவியானவர் நம்மை உணர்த்தி சுத்திகரிக்கின்றார். அந்தரங்க ஜீவியத்தில் உதவி செய்கின்றார். ஒரு வெங்காயமானது தண்டுவரை தோலுரிக்கப்படுவது போல் படிப்படியாக ஆவியானவர் நமக்கு உணர்த்துவார். மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள்ளாகப் போய் பரிசுத்த அக்கினி (Holy Fire) நம்மை அந்தரங்க ஜீவியத்திலிருந்து சுத்திகரித்து, உண்மையான ஆவிக்குரியவர்களாக மாற்றும். இதுதான் உண்மையான ஆராதனை.

- ✦ வெண்கலக் கல்லில் உள்ள தண்ணீர் - இது தேவனுடைய வார்த்தை. இந்த திருவசனத்தினால் என்னைச் சுத்திகரியும் என ஜெபி.
- ✦ வெண்கலத் தொட்டி - ஆசாரியர்களின் பாவத்தைக் கழுவும். ஆனால் நமக்கு பாவம் இல்லாத ஆசாரியர் ஒருவர் இருக்கின்றார். அவர் கிறிஸ்துவே, அவரிடம் என்னையும் உம்மைப்போல் மாற்றும் என ஜெபி.
- ✦ உயிரில்லாத கிறிஸ்துவுக்கு நிகரான வெண்கலக் கல்லை விட்டுவிட்டு, கிறிஸ்துவே உண்மையான பாவத்தைக் கழுவும் வெண்கலக்கல் என அறிந்து கொள்கின்ற கண்களைத் தாரும் என ஜெபி.

கர்த்தர் உன்னைச் சிறந்த ஆராதனை வீரனாக மாற்றுவார். ஆமென்!

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியத்தின் மூலம்
வெளியிடப்படும் வாலிப ஜெபக்குழுக்களுக்கான மாத இதழ்.

## VISION

**To reach all the spheres of India and to imbibe the heavenly manna to Our youth, who are the future pillars of Our Nation**

எல்லைகள் கடந்து நம் எதிர்கால இந்தியத் தூண்களாகிய இளைஞர்கள் உள்ளத்தில் பரலோக மன்னாவை விதைக்க, சிந்தனை கூர் கொண்டு இந்தியாவை மீட்டிடும் இலக்கியச் சேவையால் இளைஞனைத் தேற்ற ஓர் இறை படைப்பு.

## OBJECTIVE

**A monthly magazine to strengthen the prayer cells.... Produced, Layout & Design by FMPB Youth & Teens Wing**

www.fmpbyouth.org
kerithmagazine@fmpb.org
29, High school Road, Ambattur,
Chennai - 600 053.
PH: 044-26570404 EXTN 266

**தனிப்பிரதி ரூ. 25/-**
**ஆண்டு சந்தா ரூ. 250/-**

ஜெபக்குழுவில் நீங்கள் அமர்ந்து தியானிப்பதற்காகவும், ஜெபிப்பதற்காகவும் கேரீத் இதழில் செய்திகளையும், ஜெபக்குறிப்புகளையும் நடுப்பக்கத்தில் கொடுத்துள்ளோம். ஜெபக்குழுத் தலைவர்கள் அவற்றை தனியாக எடுத்து ஜெப நேரத்தில் பயன்படுத்தலாம். இப்புத்தகத்தின் ஏனையப் பகுதிகளை உங்கள் ஜெபக்குழுவுக்கு வரும் வாலிபர்களுக்குக் கொடுத்து படிக்கச் சொல்லலாம். ஏராளமான புதிய தகவல்களுடன் உங்களை மாதம் ஒருமுறை சந்திப்போம். பயன்படுத்துங்கள்... ஜெபக்குழுவை வலுப்படுத்துங்கள்...

தொடர் ஜெபத்திற்கு **அறைகூவல்** பயன்படுத்தவும்

## INDEX

| | |
|---|---|
| இளசுகள் நாலும், இலை சாப்பாடும் | - 5 & 6 |
| கேட்ட கேள்விக்கு நச்சுன்னு ஒரு பதில் | - 8 |
| நோவாவின் நிலம் - ஆர்மீனியா | - 10 |
| மன இறுக்க நோய் | - 12 |
| வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி | - 14 |
| தெரிஞ்சுக்கோ... புரிஞ்சுக்கோ... | - 20 |

# பலவீனத்தில் வெற்றிக் காண வா...

என் அன்பு இளம் உள்ளங்களுக்கு, கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

கிறிஸ்தவ வாழ்வு பந்தயம், போராட்டம் மற்றும் யுத்தம் நிறைந்தது. இதில் கவனமாயிராவிட்டால் வெற்றி பெற முடியாது. கிறிஸ்தவ வாழ்வில் நாம் பின்மாற்றமடையாதிருக்க, அசதியாயிராமல் கவனமாயிருக்க வேண்டும். போனால் போகட்டும் என்று எதையும் எளிதாக நினைத்து விட முடியாது. ஆபிரகாம் பொறுமையாய்க் காத்திருந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதைப் பெற்றான்.

ஆகையால், மேகம்போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கிநிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்” (எபிரெயர் 12:1)

நமது இந்த விசுவாச ஓட்டத்தை உற்சாகத்துடன் முடிக்க இப்படிப்பட்ட சாட்சிகள் மட்டுமல்ல, கடவுள் நமக்கு மேலாக வைத்துள்ள உத்தம தலைவர்களிடமிருந்தும் நாம் கற்றுக் கொள்ளலாம். நீங்களும் நானும் ஆராதிக்கிற கடவுள் ஏதோ ஒரு சில ஆண்டுகளில் கொஞ்சம் மக்களை அல்ல, ஆயிரக்கணக்கான ஆண்டுகளில் பல கோடி உள்ளங்களை வழிபிசகாமல் வழிநடத்தி வந்துள்ளார். ஆகையால் நமது விசுவாச வாழ்வில் வருகின்ற சோதனைகளை, பாடுகளைக் கண்டு நமது பலவீனங்களில் சோர்ந்து போகாமல், சிலுவையில் வெற்றி சிறந்த, வெற்றி நாயகனாம் இயேசுவை நோக்கி நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையாய் ஓடி வெற்றியைச் சுதந்தரித்துக் கொள்வோம். உயிர்த்தெழுந்த இயேசு நமது பலவீனங்களைச் சிலுவையில் சுமந்து நமக்கு வல்லமையையும், பலத்தையும், வெற்றியையும் தந்திருக்கிறார். ஆகையால் சோர்ந்து போகாதே, துவண்டு விடாதே வெற்றிக்காண வா!

ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள அர்ப்பணித்தோர் முகாம் மற்றும் மிஷனெரி வாலிபர் தரிசனக் கூடுகைக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள். ஜூன் மாதம் 6, 7ஆம் தேதிகளில் நடைபெறவுள்ள மிஷனெரி ஊழியத்திற்கான நேர்முகத் தேர்வில் ஆண்டவருடைய ஊழியத்திற்கென அர்ப்பணித்த வாலிபர்கள் இந்த நேர்முகத் தேர்வில் கலந்துக் கொண்டு மிஷனெரியாய் புறப்பட்டுச் செல்ல பரிசுத்த ஆவியானவர் பலத்த கிரியைச் செய்வாராக. மே மாதம் நடைபெறவுள்ள மாநில முகாமில் உங்கள் பகுதி வாலிபர்களோடு திரளாய் வந்து கலந்துக்கொள்ள உங்களை உற்சாகப்படுத்துகிறேன்.

ஏப்ரல் 1ஆம் தேதி முதல் நமது இயக்கத்தின் புதிய பொது காரியதரிசியாக (General Secretary) Rev. விஜய் பிரசன்னா ஐசக் அவர்கள் பொறுப்பெடுத்துள்ளார்கள். கர்த்தர் தாமே அண்ணனுக்கு ஞானத்தையும், பெலத்தையும், கிருபையையும் தந்தருள ஜெபிக்கிறோம், வாழ்த்துகிறோம்!

சிலுவையில் வெற்றி சிறந்த ஆண்டவர், உங்கள் வாழ்வின் எல்லா நிலைகளிலும் வெற்றியைத் தருவாராக. ஆமென்!

கிறிஸ்துவின் பணியில்,
*ஜெ. டேனியல் அருள்மணி*

Rev. Johnson Daniel

TORAH MISSION

1st WEEK MESSAGE

# மலை ஊழியம்

# ஆபிரகாம்

மலையின் மேல் உள்ள ஒரு அழகிய கிராமத்தில், தன் நண்பனைச் சந்திக்க சென்றவன், மாலை மயங்கும் நேரத்தில் தான், தன் வண்டியில் லைட் எரியாததால் உடனே தன் வீட்டிற்குத் திரும்ப வேண்டும் என்று உணர்ந்த போது பதற்றம் தொற்றிக் கொண்டது. நண்பனிடம் விடைபெற்று விரைந்தவன் மலையடிவாரம் தொடுவதற்குள் நன்கு இருட்டிவிட்டது. அப்பொழுது ஒரு திருப்பத்தில், பாறையில் மோதி, அந்தரத்தில் பறந்தவன் கையில் அகப்பட்ட ஒரு மரத்தின் கிளையை இருக பிடித்துத் தொங்கினான். உள்ளத்தில் பல எண்ணங்கள், பயம் வேறு அவனுக்கு வியர்க்க ஆரம்பித்தது. உடனே ஆண்டவரே என்னைக் காப்பாற்றும் என்று கடவுளை நோக்கி அபயமிட்டான். இப்படி கூப்பிட்டு ஓய்ந்தவனுக்கு ஆச்சரியமாய் “உன் கையை விட்டு விடு” என்ற குரல் கேட்டது. உடனே பதறி, காப்பாற்றத் தானே கேட்டேன், நீரோ என்னைக் காலாவதியாக்கிவிடுவீர் போலிருக்கிறதே என்றான். என்னை நம்பு, கையை விட்டு விடு என்றது மீண்டும் அக்குரல். முடியவே முடியாது என்று முனுமுனுத்தவன் காலை வரை அப்படியே தொங்கினான். காலையில் அக்காட்சியைக் கண்டு அதிர்ந்தேப் போனான். ஆம்! அவனுக்கும், தரைக்கும் அரையடித் தூரமேயிருந்தது.

ஆபிரகாம் ஒரு அவிசுவாசி என்று ஒரு புத்தகத்தில் நான் காண நேர்ந்தது. அந்தப் புத்தகத்தில் ஆபிரகாம் விசுவாசத்தின் தகப்பனாவதற்கு முன் எவ்வாறெல்லாம் சோதனைக்குட்படுத்தப்பட்டான் என்பதை அப்புத்தகத்தின் ஆசிரியர் எழுதியிருந்தார். அதிலிருந்து ஆபிரகாமுக்கு ஏற்பட்ட சோதனைகளை ஆண்டவரின் உதவியோடு வென்றிருக்கிறார் என்பதை வேதம் நமக்குத் தெளிவாக சுட்டிக்காட்டுகிறது.

## தேவ கட்டளைக்கு கீழ்ப்படிந்தவன்:

ஆபிரகாம் தன்னுடைய அன்றாட வாழ்க்கையில் ஆண்டவரோடு நெருங்கிய ஐக்கியம் கொண்டிருந்தார். ஆதியாகமம் 22ஆம் அதிகாரத்தில் நீண்ட நாள் காத்திருந்து, தேவ வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதலாக தன் சுதந்திரமாகிய ஈசாக்கைத் தகனபலியாக ஒப்புக்கொடுக்க தேவகட்டளையைப் பெறுகின்றான். இதில் கவனிக்க வேண்டியது என்னவென்றால், 2ஆம் வசனத்தில் உன் புத்திரனும், ஏகசுதனும், நேசகுமாரனுமாகிய ஈசாக்கு எனக் குறிப்பிடுகின்றார். இந்த வார்த்தைகள் இதே அதிகாரத்தில் மூன்று முறை தேவனால் பயன்படுத்தப்படுகிறது. பின்னர் இதேப் பதங்கள் புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்துவைப் பற்றி, பிதாவானவர் அறிமுகப்படுத்தும் மற்றும் அடையாளப்படுத்தும் வார்த்தையாக பயன்படுத்தப்பட்டுள்ளதைப் பார்க்கும்பொழுது வியப்பைத் தருகிறது. மோரியா தேசத்தின் மலைக் காட்சிக்குத் தேவ அழைப்பே ஆபிரகாமுக்கு வந்த சோதனை. அதனை ஏற்றுக்கொண்ட ஆபிரகாம், தேவக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து தன் மகனை உடன் அழைத்துச் செல்கிறான். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும் கல்வாரி மலைப் பயணத்திற்கு ஆயத்தமாகி, தன் பிதாவின் சித்தத்திற்குத் தன்னை முழுவதுமாக அர்ப்பணித்து, கீழ்ப்படிந்திருந்ததை நாம் உணர்ந்து அவருக்கு எல்லாவற்றிலும், எல்லா விதத்திலும் விசுவாசத்தோடு கீழ்ப்படிவோம். ஏனெனில் அவரே **“யெகோவா யீரே”** .

## தேவ சித்தத்திற்கு அர்ப்பணித்தவன்:

மோரியா தேசத்திற்குப் பயணப்பட்ட ஆபிரகாம், தன் வேலைக்காரரில் இருவரை தன்னோடு அழைத்துச் செல்கிறான். மூன்றாம் நாளிலே ஆபிரகாம் தன் கண்களை ஏறெடுத்துப் பார்த்தபோது தூரத்திலே (ஆதி. 22:4) தேவன் குறித்த அந்த இடத்தைக் கண்டு தன்னுடைய வேலைக்காரர்களை அங்கேயே நிறுத்திவிட்டு தானும், தன் மகனும் போய் தொழுதுகொண்டு வருவோம் என விசுவாச அறிக்கைச் செய்துவிட்டுச் செல்கிறான். எபி. 11:17-19 வசனங்களில் ஆபிரகாமின் விசுவாசம் உறுதி செய்யப்படுகிறதை நாம் காண முடியும். ஆம்! தேவன் ஈசாக்கை உயிரோடே எழுப்ப வல்லவர் என்பதை உறுதியாக விசுவாசித்ததினாலே, அவனை பலியாக ஒப்புக் கொடுக்கும் அளவிற்கு ஆண்டவரை விசுவாசித்தான். இது கல்வாரி மலையில் தனது ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை நம் பாவம் தீர்க்கும் ஒரே பலியாக ஒப்புக்கொடுத்ததைக் காட்டுகிறது. சிலுவை சுமந்த இயேசுவைப்போல் பலியின் விறகுகளை ஈசாக்கின் மேல் சுமத்தி அழைத்துச் செல்லும் காட்சியும், ஈசாக்கு பலிக்கு நெருப்பும், கட்டையும் இருக்கிறது, ஆடு எங்கே என கேட்கும் போது தேவன் அதை பார்த்துக் கொள்வார் என்பதும், ஆபிரகாமின் விசுவாச அறிக்கைக்கு சான்று. நம் விசுவாசம் செயலில் வெளிப்படுகிறதா? விசுவாசத்தோடு கூடிய அர்ப்பணிப்பு நம்மில் காணப்படுகிறதா? இதற்கென்றே நாம் அழைக்கப்பட்டவர்கள். எந்த சூழ்நிலையும் அவர்மேலுள்ள விசுவாசத்தைக் குலைத்து விடாமல் விசுவாசத்தில் உறுதியாய் தரித்திருப்போம்.

## தேவ தரிசனத்தைப் பெற்றவன்:

ஆதி. 12:1-3இல் ஆபிரகாமுக்கு ஆண்டவர் கொடுத்த பிரதானக் கட்டளைப் “உன் ஊரை விட்டு, உன் உறவுகளை விட்டு, உன் உடைமைகளை விட்டு நான் காண்பிக்கும் தேசத்திற்கு புறப்பட்டு போ என்பதே”. நான் உன்னை ஆசீர்வதிப்பதின் நோக்கம், நீ மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாய் இருக்க வேண்டும் என்பதே. பாபேலின் குழப்பத்தினால் ஒன்றாகயிருந்த மக்கள் 70 தேசங்களாக சிதறிப் போனார்கள். அதிலிருந்து ஒரு மக்கள் கூட்டத்தைத் தெரிந்துகொண்டு, அவர்கள் மூலமாய் அனைத்து மக்களையும் ஆண்டவரண்டை சேரப்பண்ண ஆபிரகாமை முதல் மிஷனெரியாக அனுப்புகிறார். அதுமட்டுமல்ல “உனக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும்” என்ற வாக்குத்தத்தத்தை உறுதியளிக்கின்றார். “உன்னால்” ஆசீர்வதிக்கப்படும் என்பதல்ல. “உனக்குள்” என்று வேதம் குறிப்பிடுவதை நாம் உற்று நோக்குவது நல்லது. ஆங்கில வேதாகமம் பின்குறிப்பில் “*Through your seed*” (NIV) என விளக்குகிறது. அதன் பொருள் உனக்குள் வரும் வித்தின் மூலம் அல்லது வித்தானவர் அனைவரையும் தமதாக்குவார் என்பதாகும். இந்த வார்த்தையிலிருந்து ஆபிரகாமின் விசுவாச போராட்டம் துவங்குகிறது. இதை பவுல் அப்போஸ்தலன் கலா. 3:8இல் உறுதி செய்கிறார். இந்த வாக்குத்தத்தம் ஆபிரகாமுக்கு சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டது என சாட்சியிடுகிறார். யார் அந்த வித்தானவர்? யார் தன்னுடைய வாரிசு? யாரால் மீட்பு? என்ற அடுக்கடுக்கானக் கேள்விகளுக்கு ஆண்டவரின் விரிவான விளக்கமே மோரியா தேசத்தின் மலைக் காட்சி. ஈசாக்குக்கு பதிலாக ஆடு பலியிடப்படுகிறது. இது ஈசாக்கு அல்ல ஆட்டுக்குட்டியானவரே நமது பாவம் தீர்க்கும் பலியாக ஒப்புக்கொடுக்கப்படுவார் என்பதை அந்த மலையின் மேல் செய்முறை காட்சியாய் ஆபிரகாமுக்கு விவரித்து காண்பித்தார் ஆண்டவர். அதேபோல் அதே மலையில் ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்குப் பின் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் நம் பாவம் தீர்க்கும் பலியாக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்து ஆபிரகாமுக்கு சொன்ன வாக்குத்தத்தத்தை (ஆதி. 22:18) நிறைவேற்றி சுவிசேஷத்தின் பூரணரானார்.

நம் முற்பிதாவாகிய ஆபிரகாமைப் போல் நாமும் கல்வாரிக்கு நேராய் நம்மைத் திருப்புவோம். இந்த லெந்து காலங்கள் அதற்கென்றே நியமிக்கப்பட்ட நாட்கள் என்பதை உணர்ந்து, உண்மையான மனந்திரும்புதலோடும், உபவாசத்தோடும், ஆத்தும அலங்கரிப்புக்கு நம்மை உட்படுத்துவோம்.

# இளசுகள் நாலும் இலை சாப்பாடும்

FELLOWSHIP LUNCH

Mr. Isaac Kamalesh

**(நாலு இளைஞர்களின் பெயர்கள்: Dr. சத்தியன், Er. சாதுரியன், Pr. விஷயம் , Rev. ரகசியம்)**

சத்தியன்: டேய் எங்க நிக்கீங்க

சாதுரியன்: நாங்க கொல பசில நிக்கிறோம்

சத்தியன்: நானும் கொல பசியா தான்டா வந்துகிட்டிருக்கேன். இடத்தைச் சொன்னா உடனே வந்துடுவேன்.

சாதுரியன்: அதான்டா சொல்றேன் கொல பசில நிற்கிறோம்

விஷயம்: *(Mobilல பிடுங்கி)* நண்பா கடை பேரு தான் "கொலபசி". நீ *IT Hub* ரோட்டுல சரியா மூணு கிலோ மீட்டர் *Drive* பண்ணினா *Left Side*-ல *TT (Talent Tank) IT Building* வரும். அதுக்கு அடுத்த கடை

சத்தியன்: *OK*, நான் இன்னும் 5 நிமிஷத்திலே வந்துடுவேன்.

(சொன்னபடியே 5 நிமிடத்தில் வந்துவிட்டான்)

சத்தியன்: என்னடா இங்க ஒவ்வொரு கடை முன்னாடியும் செவப்பு கலர் பனியன் போட்டு நிறைய பேர் நிக்கிறாங்க

விஷயம்: ஆமா, இந்த ஏரியா முழுவதும் *IT* கம்பெனிகள் அதிகம். இங்க ஆபீசுக்குள்ளே உட்கார்ந்து ஆர்டர் பண்ண வேண்டியது. சாப்பிட வேண்டியது.

சத்தியன்: நீ சொல்றத பார்த்தா பசியாளிகள் அதிகமுன்னு சொல்லு

விஷயம்: நீ நினைக்கிற மாதிரி வயித்து பசி மட்டுமல்ல நண்பா. இங்கு அறிவுப்பசி, பணப்பசி, வேலைப்பசி, அந்த " ..... " பசி இன்னும் சொல்லப்போனால் ஆன்மீகப்பசி இப்படி ஒவ்வொரு பசியிலேயும் நிறைய பேரைப் பார்க்கலாம்

ரகசியம்: அப்படியா, ஆமா ஆன்மீக பசின்னா என்ன?

விஷயம்: அது ஆன்மீகத்தை நிறைய தெரிஞ்சுவச்சிருப்பாங்க. ஆனா முட்டாளா அலைவாங்க, இங்க *Branded Style*-ல பாஸ்டர்ஸ் அதிகம். *IT* சபைகளும் உண்டு

ரகசியம்: அது என்னடா *IT* சபை

விஷயம்: அதுவா *Income Tent* (அனைவரும் சிரிப்பு) இந்த *Gen-z* பாஸ்டர்ஸ் அவங்க பேசுறது தப்புனு அவங்களுக்குத் தெரியும். கேட்கிற கூட்டத்திற்கும் பாஸ்டர் பேசுறது தப்புன்னு தெரியும். ஆனா எல்லோரும் ஒரு *Sunday*யை சந்தோஷமா பொழுதுப் போக்குவாங்க. அவளோதான் அப்படின்னாதான் *Monday - Friday* அவங்களாலே வேலைப் பார்க்க முடியும். வேலையிலும் மேனேஜர் இவங்களிடம் பேசறது புரியாது. இவங்க மேனேஜர் கிட்ட பொய் *Commitment* கொடுப்பாங்க. மொத்தத்திலே 2 பேரும் சேர்ந்து கம்பெனியை ஏமாத்திக்கிட்டிருப்பாங்க

சாதுரியன்: சரி டேய், ஆர்டர் பண்ணு

(ஆர்டர் செய்தது வந்தது) (*Grill Chicken Plate*-ல வெள்ளைக் கலர்ல 2 ரொட்டி இருந்தது)

சாதுரியன்: டேய் இந்த ரொட்டியோட பெயர் என்னடா!

ரகசியம்: இது '*Kuboos Roti*' நம்ம புளிப்பில்லா அப்பம் மாதிரி, மாதிரின்னு தான் சொன்னேன். ஏன் இப்படி பார்க்கிறீங்க!

சாதுரியன்: இல்ல, நீ இதுல எங்கேயோ சிக்குன மாதிரி இருக்கு

ரகசியம்: சிக்கிருக்கேன். இப்பதான் எனக்கு ஞாபகம் வருகிறது

(மற்ற மூவரும் சிரிச்சிகிட்டே சொல்லு, சொல்லு)

நான் *B.Th.* காலேஜ்ல படிக்கிறப்ப *NT Class*-ல ஒரு பையன் சந்தேகம் கேட்டான்.

விஷயம்: சந்தேகம் உருவாகும் இடமே *Theological College* தானே

ரகசியம்: இயேசு கற்றுக்கொடுத்த ஜெபத்தில் "அன்றன்றுள்ள அப்பம்", வார்த்தை வந்தது *(Daily Bread)*, நாம ஏன் *Bread*னு *Use* பண்ணனும். இது *Western culture* நம்ம அன்றன்றுள்ள சோற்றைத் தாருன்னு ஏன் ஜெபிக்கக்கூடாது.

(எல்லோரும் ஒரே சிரிப்பு)

சாதுரியன்: உங்க *Professor* உடனே சரின்னு சொல்லியிருப்பாரே. நல்ல வேளை எங்க அப்பா நாலு தலைமுறைக்கு சொத்து சேர்த்து வைச்சிருக்காரு. எனக்கு சாப்பாட்டுக்கு பஞ்சமேயில்லைன்னு சொல்லி அந்த வார்த்தையை எடுக்க சொல்லாமலிருந்தானே, அதுக்கு அவன பாராட்டனும்.

சத்தியன்: அதாவது வேதத்தில் "அப்பம்" என்கிற வார்த்தை மிகவும் முக்கியமானது. டேய் ரகசியம், நீ உடனே இதுக்கு "அப்பம் இறையியல்"-ன்னு *(Bread Theology)* பேர் வைச்சிராதே. கொஞ்சம் பொறுமையாயிரு. ஆதி. 3:19இல் "ஆகாரம்" என்ற வார்த்தை, இயேசுவானவர் 40 நாள் உபவாசத்திற்குப் பின்பு பயன்படுத்திய அப்பம் என்கிற வார்த்தை (மத். 4:4, உபா. 8:3) இரண்டும் ஒரே எபிரேய வார்த்தை தான் அதாவது "லெகம்" *(Lechem)*. இந்த வார்த்தையிலிருந்து தான் பெத்லெகேம் வந்தது. இதில் பெத் என்றால் வீடு. லெகேம் என்றால் அப்பம். அதாவது அப்பத்தின் வீடு. இங்கு தான் ஜீவ அப்பமாகிய இயேசு கிறிஸ்து பிறந்தார். இந்த லெகம் என்ற வார்த்தை பழைய ஏற்பாட்டில் மட்டும் 296 முறை வருகிறது.

சாதுரியன்: ஓ இதுல இவ்வளவு சரித்திரம் இருக்கா. டேய் சத்தியன், இயேசு அப்பத்தைப் பிட்டு சீஷர்களுக்குக் கொடுத்து, இதுக்கு என்னடா அர்த்தம்.

சத்தியன்: அதுவா, பஸ்கா ஆசரிப்பில் திராட்சைரசம் மற்றும் அப்பம் இருக்கும். இதில் திராட்சைரசம் 4 *Cup*யிலும், 3 அப்பங்கள் ஒரு தட்டிலும் இருக்கும். முதலாவது திராட்சைரசத்தைப் பார்ப்போம். யாத். 6:6, 7 தான் மையம். முதல் *Cup*க்கு

பரிசுத்தமாகுதல் (The cub of Sanctification) என்றும்,
2 வது Cupக்கு விடுதலை (The Cup of Deliverence),
3வது Cupக்கு மீட்பு அல்லது ஆசீர்வாதம்
(The Cup of Redemption or Blessing) (1கொரி. 10:16)
என்றும் அர்த்தம். இதைத் தான் மாற்கு 14:23-26
வரை வாசிக்கிறோம். இப்பொழுது அப்பத்தின் முறை.

சாதுரியன்: டேய் 4 Cupன்னு சொன்னே, 4வது Cup என்னாச்சு

சத்தியன்: 4வது Cupன் பெயர் The Cup of Praise (யாத். 6:7)
இதை இராப்போஜனத்தன்று இயேசு பருகவில்லை.
தயவு செய்து இந்த வசனத்தை படிடா மத்.26:29.
இதைத் தொடர்ந்து ஸ்தோத்திரப்பாட்டைப்பாடி
ஒலிவமலைக்குப் புறப்பட்டு போனார்கள் (மத். 26:30).

சாதுரியன்: டேய் ஸ்தோத்திரப்பாட்டுன்னா என்னது?

சத்தியன்: எல்லாமே சங்கீதம் தான். 3வது Cupக்கு பிறகு
சங். 136 பாட்டு. 4வது Cupக்கு பிறகு சங்.115-118
வரை. இதைதான் ஸ்தோத்திரப்பாட்டு என்கிறது.

சாதுரியன்: கேட்கவே புல்லரிக்கிதுடா

ரகசியம் குறுக்கிட்டு அப்பத்தின் முறையை நான் சொல்றேன்.

விஷயம்: உனக்குத் தெரியுமா? சொல்லு சொல்லு

ரகசியம்: 3 அப்பத்திலே நடுவுல உள்ள அப்பம்
முக்கியமானது. அந்த அப்பத்தை மேசியா
அப்பமுன்னு சொல்வாங்க. இது உடைஞ்சு இருக்கும்
ஒருசில பகுதிகளை வீட்டுலே ஒளித்து
வைத்திருப்பார்கள். வீட்டிலுள்ளவர்கள் அதைத்
தேடி கண்டுபிடிக்கனும். காரணம் பழைய
ஏற்பாட்டிலே கிறிஸ்து மறைவாக
சொல்லப்பட்டிருக்கும். நாம் தேடி தான்
கண்டுபிடிக்க வேண்டும் என்பது தான் அர்த்தம்.
இந்த அப்பத்தை ஒரு மெல்லிய துணியில் சுற்றி
வைப்பார்கள்.

விஷயம்: டேய், இயேசு பிறந்தபோதும் அவரை மெல்லிய
துணியில் தானே சுற்றி வைச்சாங்க.

ரகசியம் தொடர்ந்து: ஆமாடா சரியா சொன்ன, இந்த
அப்பத்தை யாரும் தொடமாட்டாங்க. மொத,
மொத இயேசுவானவர் தான்
இராப்போஜனத்தன்னைக்கு நடுவில் உள்ள அதை
உடைத்து மேசியாவின் அப்பத்தை எடுத்து இது
உங்களுக்காக பிட்கப்பட்ட என் சரீரம் என்று
சொன்னார்.

விஷயம்: ஓ... Superடா, டேய் இரசியம் இதைப்
பிரசங்கத்திலும் சொல்லியிருக்கியா?

ரகசியம்: இல்லடா, ஜனங்களுக்கு இதெல்லாம் புரியாது.

விஷயம்: இப்படியே Maintain பண்ணு. அதான் நல்லது.
அப்பதான் Sunday school பிள்ளைங்க உன்கிட்டே
வந்து ஏன் பாஸ்டர் நாங்க அன்றன்ள Pizzaவை
எங்களுக்குத் தாருன்னு ஜெபம் பண்ணலாமான்னு
கேட்பாங்க.

(மூவரும் சிரிப்பு)

ரகசியம்: Pizzaன்னு சொன்னப்பிறகு தான் எனக்கு
ஞாபகம் வருது, இன்னும் சமூகத்தப்பம்,



வானத்திலிருந்து இறங்கிய அப்பம், ஜீவ அப்பம்,
மன்னா என்று நம்ம படிக்க வேணடியது நிறைய
இருக்கு. சரியா சொன்ன இப்பமே
தெரிஞ்சிகிடனுமுன்னு ஆசையாயிருக்கு.
மொத்தத்தில் அப்பம் என்பது சரீர தேவைக்காக
மட்டுமல்ல, அது ஆன்மீக தேவைக்காகவும் தான்.

(மற்ற மூவரும் சரியான வார்த்தை)

ரகசியம்: அப்பம் என்பது ஆசீர்வாதத்திற்கும், சாபம்
அல்லது தண்டனைக்கும் பயன்படுத்தப்படுகிறது
என்பதை மறந்துவிடக்கூடாது. நாம் தேவனை
விட்டு விலகினால் நம்முடைய அப்பம்
வேறொருவனுக்குக் கொடுக்கப்படும் என்று
எச்சரிக்கையாகச் சொல்லப்படுகிறது.
(எரே. 5:17, 18) வாசித்துப்பார் புரியும்.

விஷயம்: டேய், ஆசீர்வாதம்னா என்ன?

ரகசியம்: நீ அதிலேயே குறியாயிரு. நமக்கு தெரிஞ்ச வசனம்
தான் (யோவான் 6:32-35) ஜீவ அப்பம் நானே.
என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும்
பசியடையான்.

(நாம சாப்பிட்டதே தெரியல பேச்சில மூழ்கிட்டோம்)

சாதுரியன்: ஆனா இன்னைக்கு வயிறு மட்டும் நிரம்பல.
உள்ளமும் நிறைஞ்சிருக்கு.

சத்தியன்: டேய், நாம அடுத்தமாதம் எந்த கடையில
சந்திக்கலாம்

விஷயம்: கடையிலா! நம்ம நாலுபேரும் சேலம்
டேனிஷ்பேட்டையில் நடைபெறும் மாநில
முகாம்ல சந்திப்போம். வரிசையில் நின்னு வாங்கி
சாப்பிட்டுக்கிட்டே பேசலாம். ஒன்ன மறந்திராத
தட்டு நம்ம தான் கொண்டுபோகனும். இலைப்
போட்டு 11 கூட்டு வைப்பாங்கன்னு நினைச்சிராத.

# சகோதர அன்பை வலியுறுத்தும் ஊழியம்

## ஒபதியா



2nd WEEK MESSAGE

OT MISSION

Rev. Daniel Gnanapragasam

*சகோதர அன்பு என்பது நாம் எதிர்பார்க்கும் அன்பை (or) ஆர்வத்தை நம் சகோதரனாகிய மற்றொருவனுக்கு காண்பிக்கும் அன்பாகும். இந்த அன்பின் முக்கியத்துவம் "கிறிஸ்தவ வாழ்வின் அடித்தளமாக" இருக்கின்றது. இத்தகைய அன்பு வெறும் செயலற்ற உணர்ச்சியாக இருந்துவிடக் கூடாது. ஏனென்றால் அது*

- *i.* *நாம் கடவுளிடம் காண்பிக்கும் அன்பிற்கு இணையாக (1யோவான் 4:20)*
- *ii.* *நியாயப்பிரமாணத்தின் நிறைவேறுதலாக (கலா. 5:14)*
- *iii.* *ராஜரீக பிரமாணமாக (யாக். 2:8) கூறப்பட்டுள்ளது.*

*21 வசனங்களைக் கொண்ட மிகக் குறுகிய "ஒபதியா புத்தகம்" நமக்கு சகோதர அன்பின் அவசியத்தையும், தவறும் போது கிடைக்கும் தண்டனைகளையும் மிகத் தெளிவாக விளக்குகிறது.*

*யார் இந்த சகோதரர்கள்? அவர்கள் ஏதோம் என்று அழைக்கப்பட்ட ஏசாவின் சந்ததியாரும், இஸ்ரவேல் என்று அழைக்கப்பட்ட யாக்கோபின் சந்ததியாருமே. ஒரே பிரசவத்திலே இருவரும் பிறந்திருந்தாலும், இவர்களிடையேயான பகை வயிற்றில் இருக்கும் போதிலிருந்தே தொடங்குகிறது (ஆதி. 25:22, 23). ஒரு கட்டத்தில் வெளிப்படையான நட்பை காட்டிக்கொண்டாலும் (ஆதி. 33:4), குறைவுப்பட்ட அன்பு வஞ்சகமாக மனதின் ஓரத்திலிருந்து மற்றவனுக்கு நன்மையைக் கொடுக்க மறுக்கின்றது (எண். 20:14-21). மாம்சத்திற்கு முக்கியத்துவம் கொடுத்த ஏசா, தன் ஆவிக்குரிய ஆசீர்வாதமான சேஷ்டபுத்திர பாகத்தை அலட்சியப்படுத்தி யாக்கோபுவிற்கு விற்றுப் போட்டதினால் இந்தப் பகை "நிரந்தரப் பகையாகி" மாம்சசிந்தைக்கும், ஆவியின் சிந்தைக்குமான போராட்டமாகி இருவரின் வம்ச வழியில் வந்த இயேசுவிற்கும் (யாக்கோபின் வம்சம்), ஏரோதுவிற்கும் (ஏசாவின் வம்சம்) தொடர்ந்து வருவதை நம்மால் எளிதில் விட்டுவிட முடியாது.*

*எதிரிகளின் படையெடுப்பினால் நெருக்கப்பட்டிருந்த இஸ்ரவேலர்களுக்கு, சகோதர அன்பைக் காண்பிக்கத் தவறி அவர்களை எள்ளி நகையாடிய ஏதோமியர்களின் செயல்களையும், அதனால் அவர்களுக்கு வரவிருக்கின்ற தண்டனைகளையும் (நியாயத்தீர்ப்பு) ஏதோமியரின் ஸ்தானாதிபதிகளுக்கு அனுப்பப்படும் செய்தியாக (ஒப. 1:1) ஒபதியா தரிசனத்திலே கண்டதை இப்புத்தகம் விளக்குகிறது.*

### I. ஏதோமின் பெருமையும், அதன் விளைவான வெறுமையும்:

தேவதூதர்களின் பெருமை கடவுளுக்கு எதிராக அவர்களைச் செயல்பட வைத்து சாத்தானாக மாற்றியது. பெருமையே முதல் பாவமாகவும், பல பாவங்களுக்கு இதுவே மூலக்காரணமாகவும் கருதப்படுகிறது. **"தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார்" (யாக்கோபு 4:6)**

**ஏதோமியர்களின் பெருமையின் மதிப்பீடு (Assess of Pride)**

**1. உயர்ந்த ஸ்தானம் (V.3)** - *2000 அடி உயரத்திலுள்ள பெட்ரா (or) சேலா என்று அழைக்கப்படுகின்ற அழகிய நகரம் மிகவும் நேர்த்தியாக பாறைகளில் செதுக்கப்பட்டு எளிதில் தாக்க முடியாத கோட்டையாக விளங்கியது.*

**2. ஞானம்** - பொதுவாகவே ஏதோமின் தென்பகுதியான தேமானின் மக்கள் மிகுந்த ஞானமுள்ளவர்களாக இருந்தனர் (எரே. 49:7)

**3. கூட்டாளிகளின் பலம் (V.7)** - எசியோன் கெபர் மற்றும் போஸ்ரா வர்த்தக நகரங்களாக விளங்குகிறது. இதன் விளைவாக சுற்றியுள்ள நாடுகளுடன் சிறந்த வர்த்தக உறவு கொண்டிருந்தது. "அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும்" (தானியேல் 4:37b) என்ற வசனத்தின் படி அவர்களின் பெருமைக்கு தேவனிடத்திலிருந்து வந்த பதில் அவர்களை முற்றிலும் வெறுமையாக்கியது.

*1.உயர்ந்த ஸ்தானத்திலிருந்து விழத்தள்ளப்படுவார்கள் (v.4)*

*2.கூட்டாளிகளினாலே துரத்தப்படுவார்கள் (v.7)*

*3.ஞானிகளும், புத்திமான்களும் அழிக்கப்படுவார்கள் (v.8)*

### II. ஏதோமின் பகைமையும், அதன் தாக்கமான தீமையும்:

புகையும், பகையும் பண்பினில் ஒன்றுதான். புகையிருந்தால் அங்கே நெருப்பு உண்டு, பகையிருந்தால் அங்கே நெருப்பு போன்ற வெறுப்பு உண்டு என்பார்கள். பகை என்பது ஆழமாக வேரூன்றிய வெறுப்பாகும். பகைமை என்னும் கசப்பான வேர் தேவனுடைய கிருபையை இழந்துபோகப் பண்ணும் (எபி. 12:15, 16)

**ஏதோமியர்களின் பகைமையின் செயல்பாடு (Activities of Enmity)**

**1. ஒருமித்து இருத்தல் (V.11)** - பகைவர்கள் இஸ்ரவேல் ஜனங்களுக்கு எதிர்த்து நின்ற போதும், அவர்கள் சிறைப்பிடிக்கப்பட்ட போதும், அவர்கள் வாசலுக்குள் பிரவேசித்து எதிரிகள் சீட்டு போட்ட காலத்திலும் ஏதோமியர்கள் ஒருமித்து இருந்தார்கள்.

**2. அழிவில் மகிழ்தல் (V.12)** - தன் சொந்த சகோதரனின் அழிவில் அவனுக்கு உதவி செய்ய மறுத்து, அவன் அந்நியவசமாய் பிடிபட்டுப் போவதைக் கண்டு மகிழ்ந்தார்கள்.

**3. சுய பெருமையை காண்பித்தல் (V.12)** - இஸ்ரவேலர்கள் நெருக்கப்படுகிற நாட்களிலே அவர்கள் தங்கள் உயர்வான ஸ்தானத்தைக் குறித்தும், தங்கள் பாதுகாப்பைக் குறித்தும் பெருமிதம் கொண்டார்கள்.

காலங்காலமாக அவர்கள் மனதிலிருந்த பகையுணர்வு, இப்பொழுது வன்மமாக வெளிப்பட்டது. "பகையை வஞ்சகமாய் மறைத்து வைக்கிறவனெவனோ, அவனுடைய பொல்லாங்கு மகா சபையிலே வெளிப்படுத்தப்படும்" (நீதிமொழிகள் 26:26) என்ற வசனத்தின் படி தேவனுடைய பதில் அவர்களுக்குத் தீமையை விளைவித்தது.

*1. ஒருமித்து இருந்தவர்கள் பின்னாளிலே அவர்களை மோசம் போக்குவார்கள் (v.7)*

*2. அழிவில் மகிழ்ந்தவர்கள் கலக்கமும், வேதனையும் அடைவார்கள் (v.9)*

*3. சுய பெருமையைப் பேசியவர்கள் மகிமையை இழந்து, முற்றிலும் சங்கரிக்கப்பட்டு வெட்கத்தால் மூடப்படுவார்கள் (v.10)*

**(இதன் தொடர்ச்சி 18ஆம் பக்கம்)**



# நான் ஏன் சுவிசேஷம் அறிவிக்க வேண்டும்?



Mrs. Jeba Saral

Hello, யுவன், யுவதிகளே! எல்லோரும் எப்படி இருக்கீங்க? இந்த வருடம் நாம் நமக்குள்ளே எழும் சில கேள்விகளுக்கு வேதத்தின் அடிப்படையில் பதில்களைப் பெற்று வருகிறோம். அந்த வரிசையில் இந்த மாதம், ஏன் அக்கா நான் இயேசுவைக் குறித்து மற்றவர்களுக்கு சொல்ல வேண்டும்? என்ற கேள்விக்கு பதிலைக் கண்டுபிடிப்போம். நீங்க நினைக்கலாம், இயேசப்பாவைப் பற்றி நான்தான் சொல்லியாகணுமா? அதுக்கு தான் எவ்வளவோ Missionaries இருக்காங்களே. இயேசப்பாவைப் பற்றி தெரிஞ்சிக்கணும்னா Bible படிச்சா போதாதா? அதுதான் Online–ல Free–ஆ கிடைக்குதே? எனக்கு Most–ஆ Christian Friends தான் இருக்காங்க. So, எனக்கு சுவிசேஷம் சொல்ல வாய்ப்புகள் கம்மி என்று அல்லத்தட்டுறியா? தம்பி, தங்கச்சி முதல்ல நான் ஒரு கேள்விக் கேட்கிறேன். நீ எதுக்கு இயேசுவின் பிள்ளையா இருக்க? நீ இயேசுவின் பிள்ளையானால், தினமும் வேதத்தைத் தியானித்து, ஜெபிக்கிறாயா? வேதத்தின்படி நடக்க முயற்சிக்கிறாயா? இந்த கேள்விகளைத் திரும்பவும் நன்றாய்ப் படித்து, யோசித்துப் பார்? லூக்கா 16:19–31இல் ஐசுவரியவான் மற்றும் லாசருக்கு நடந்ததை வாசிக்கிறோம். அதில் ஐசுவரியவான், ஆபிரகாமின் மடியிலிருக்கும் லாசருவைத் தன் ஐந்து சகோதரர்களிடமும் அனுப்பி, பாதாளத்தின் கொடுமையைப் பற்றி சொல்ல வேண்டும் என்று ஆபிரகாமிடம் கெஞ்சுகிறான். இதிலிருந்து நாம் என்ன கற்றுக் கொள்கிறோம்? இந்த ஐசுவரியவானின் நிலை வேறு யாருக்கும் வந்து விடக்கூடாது. இதனால்தான் இயேசுவே பரலோகத்திற்கு வழி, சத்தியம், அவர்தான் உனக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கமுடியும் என்று மற்றவர்களுக்கு நாம் சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

மேலும் இயேசுவும் கடைசியாக பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன் “நீங்கள் உலகமெங்கும்போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்” (மாற்கு 16:15) என்று கூறினார். அதனால் “சுவிசேஷம் சொல்வது நம்மேல் விழுந்தக் கடமையாயிருக்கிறது” (1கொரி. 9:16). இது தேவனுடைய கட்டளையாயும் இருக்கிறது.

சரி, எங்கெல்லாம் சுவிசேஷம் சொல்ல வாய்ப்பு இருக்கு? உன் பள்ளியில் பயிலும் உன் நண்பர்களுக்கும், உன்னோடு Train, Bus, Auto, Vanஇல் பயணிப்பவர்களிடமும், உன் வீட்டில் வேலை செய்பவர்களுக்கும், உன் வீட்டைச் சுற்றிலுமிருப்பவர்களை Prayer Meeting, Birthday Party என்று அவர்களை அழைத்தும் கிறிஸ்துவின் அன்பைக் கூறலாம். பல ஊழிய ஸ்தாபனங்களோடு இணைந்து (Children, Teens, Youth மத்தியில் நடத்தும் கூடுகைகளில்) Volunteer–ஆகவும், இயேசுவைப் பற்றி அறியாதவர்களுக்கு Tracts கொடுத்தும் சுவிசேஷம் சொல்லலாம்.

எனக்கு Bible–ஐ வைத்தெல்லாம் Gospel சொல்லத் தெரியாது என்றால், இயேசு உனக்கு செய்த அற்புதம் மற்றும் உனக்கு ஆறுதல் அளித்தவைகளைச் சாட்சியாய் மற்றவர்களுக்கு சொல்லலாம். அக்கா எனக்கு இயேசுவைப் பற்றி சொல்ல வெட்கமாக உள்ளதென்றால், இயேசுவும் உன்னைக்குறித்து அவருடைய இரண்டாம் வருகையில் வெட்கப்படுவார் (லூக்கா 9:26) என்று பார்க்கிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக, நீ தேவனுடைய பிள்ளையாயிருந்து சாட்சியாய் வாழ்ந்தால்தான், நீ சொல்லும் இயேசுவை உன் நண்பர்களால் தெரிந்துக் கொள்ள முடியும். நீயே கோபப்படுகிறவனாக, இரக்கம் இல்லாதவனாக, பெருமையாய், Selfish–ஆக இருந்தால் Better நீ உன் Mission–யை Call Off பண்ணிக்கலாம்!! கிறிஸ்துவை உண்மையாய் அறிந்தவனாய்/வளாய் இருந்தாயானால், உன்னால் சும்மா இருக்க முடியாது. அப்படி சும்மா இருந்தால், முதலாவது உன் இயேசுவை நன்கு அறிந்துக்கொள். இதைப் படிக்கும் உன்னை, தேவன் தட்டி எழுப்புகிறார். அவரது அன்பின் அழைப்பைக் கேட்டு, அவருக்காய் வாழ்ந்து, சிலரையாகிலும் நரக அக்கினியிலிருந்து தப்புவிப்பாயா?

**“நீங்கள் பகுத்தறிவுள்ளவர்களாயிருந்து, சிலருக்கு இரக்கம்பாராட்டி,**
**சிலரை அக்கினியிலிருந்து இழுத்துவிட்டு, பயத்தோடே இரட்சித்து...” (யூதா : 22).**

மனம் மாறுவோம்! மனம் மாற்றுவோம் இயேசுவுக்காய்!!

# பஞ்சாப்

பஞ்சாப் இந்தியாவின் செழிப்பு மிக்க மாநிலங்களில் ஒன்று. ‘பஞ்’ என்றால் ‘ஐந்து’ என்றும் ‘ஆப்’ என்றால் நீர் என்றும் பொருள். சட்லஜ், ரவி, சேனப், ஜெலும், பியாஸ் என்ற ஐந்து நதிகளைக் கொண்டுள்ளதால் பஞ்சாப் எனப் பெயரிடப்பட்டுள்ளது. பஞ்சாப் என்றாலே சீக்கியர் மற்றும் அவர்கள் அணியும் தலைப்பாகையும் (டர்பன்), குர்தாவுமே நம் நினைவுக்கு வரும். இவர்கள் இயல்பாகவே விருந்தோம்பலில் சிறந்தவர்கள்.

**மத நம்பிக்கை:**

இவர்கள் குரு வணக்கம் செய்பவர்கள். சீக்கிய மதத்தைப் பின்பற்றுகின்றனர். குருத்வாரா இவர்கள் தொழுகை ஸ்தலம். ‘குரு கிரந்த் சாகிப்’ என்ற புத்தகத்தைப் புனித புத்தகமாகக் கருதுகின்றனர்.

**சீக்கிய மதத்தின் மூன்று தூண்கள்:**

1. நாம்சப்னா – கடவுளைப் பற்றிய தியானம்.
2. கீராத் கரணி – உண்மை, ஒழுக்கத்துடன் வாழ்ந்து நற்பெயர் எடுப்பது.
3. சப்னா – வேறுபாடின்றி பகிர்வது.

**நமது ஊழியம்:**

1974ஆம் ஆண்டு ஹரியானா மாநிலத்தில் ரத்தியா பணித்தளத்தில் ஊழியம் செய்து வந்த நமது ஊழியர்கள் பஞ்சாப் எல்லைகளிலும், தங்கள் ஊழியத்தைச் செய்து வந்தனர். (திரு. சோபிதசிங், திரு. ஜிம்சன், திரு. ஆபிரகாம் மற்றும் பிற மிஷனெரிகள்) அப்பொழுது சிலர் மட்டுமே கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டனர்.

1991ஆம் ஆண்டு அக்டோபர் 10ஆம் தேதி திரு. ஜாண் பாலசிங் மீண்டும் பஞ்சாபில் புத்லாடா பகுதியில் ஊழியம் செய்ய ஆரம்பித்தார். 1992ஆம் ஆண்டு திரு. பி. டேவிட் அவர்களும், அவரைத் தொடர்ந்து திரு. ஜெபக்குமார் மற்றும் பலர் இங்கு ஊழியத்தைச் செய்தனர். இவர்கள் நாட்களில் தேவன் ஏராளமான ஆத்துமாக்களைத் தர ஆரம்பித்தார். ‘நாளைய பஞ்சாப்’ திட்டத்தின் மூலம் 38000 ஆத்துமாக்களைத் தந்தார். ‘நமது பஞ்சாப்’ திட்டத்தின் மூலம் 10 லட்சம் ஆத்துமாக்களைச் சந்திக்க திட்டம் வைத்து, 18 மாதங்களிலேயே 39,000 பேர் திருமுழுக்குப் பெற்று தேவ மந்தையில் இணைந்தனர். மறுபுறம் பல பாடுகள், எதிர்ப்புகள் வந்துக்கொண்டிருந்தது. அப்பொழுது அங்கு மிஷனெரியாக இருந்த திரு. ஜெபக்குமார் கோதுமை மணியாக மரித்தார். இப்படி இழப்புகள் மத்தியிலும் தேவன் ஆத்துமாக்களைத் தொடர்ந்து தந்துக்கொண்டேயுள்ளார்.

**பணித்தளங்களில் இன்று...**

| | |
|---|---|
| சந்திக்கப்பட்டு வரும் மக்களினங்கள் | – 20 |
| பணித்தளங்கள் | – 17 |
| சுதேச ஊழியர்கள் | – 21 |
| பணி செய்யும் மாவட்டங்கள் | – 18 |
| பணி செய்யும் ஊழியர்கள் குடும்பம் | – 17 |
| தன்னார்வ ஊழியர்கள் | – 7 |
| மறுமலர்ச்சிப் பெற்ற ஆத்துமாக்கள் | – 2,03,102 |



**ஜெபக்குறிப்புகள்:**

- குருக்களையும், மந்திரவாதிகளையும் பின்பற்றிச் செல்லும் இம்மக்களின் ஆவிக்குரிய மனக்கண்கள் திறக்கப்பட
- காலிஸ்தான் பிரிவினைவாதிகளால் மக்களுக்கும், விசுவாசிகளுக்கும் ஏற்பட்டுள்ள பயங்கள் நீங்க
- இம்மக்களிடையே காணப்படும் இன வேறுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள் முற்றிலும் ஒழிக்கப்பட, விசுவாசிகளான பிறகு ஒருவரையொருவர் மனப்பூர்வமாக ஏற்றுக்கொள்ள
- மஜ்பி சீக்கிய விசுவாசிகள், உயர் ஜாதியான ஜாட் சீக்கியர்களிடம் கொத்தடிமைகளாக இருக்கின்ற நிலை மாற
- கொள்ளை, கடத்தல் மற்றும் தாதாக்கள் மாஃபியா கும்பலோடு சேர்ந்து தவறான வழியில் ஈடுபட்டு வரும் இளைஞர்களுக்காக
- போதை மற்றும் குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ளோர் அதிலிருந்து விடுதலைப் பெற
- ஆண்டவரை ஏற்றுக்கொண்ட விசுவாசிகள் சாட்சியுள்ள வாழ்க்கை வாழ
- தவறான உபதேசங்கள் மற்றும் கவர்ச்சிகரமான போதகங்கள் மூலம் விசுவாசிகள் சத்தியத்தை விட்டு வழிவிலகிப் போகாமலிருக்க
- 12,860 கிராமங்களிலும் சுவிசேஷம் அறிவிக்கப்படவும், திரளான மக்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ளவும் ஜெபிப்போம்.

FIELD - FMPB

Mrs. Vasanthi Emmanuel



# நோவாவின் நிலம்
# ஆர்மீனியா

PRAYER POINTS - NICK NAME COUNTRIES

Ms. Beulah Baskar

நோவாவின் காலத்தில் நிகழ்ந்த மிகப்பெரும் ஜலப்பிரளயம், பிறகு நோவாவின் பேழை தங்கியதாகக் கூறப்படும் அரராத் மலை பற்றி ஆதியாகமத்திலுள்ள வேதப் பகுதி நினைவிருக்கிறதா?

**புவியியல் அமைப்பு:**

கிழக்கு ஐரோப்பாவுக்கும், தென்மேற்கு ஆசியாவுக்கும் இடையிலுள்ள எல்லைப்பகுதியில் அமைந்துள்ள நாடு இது. இதன் எல்லைப் பகுதிகளாக மேற்கே துருக்கி, வடக்கே ஜார்ஜியா, கிழக்கே நகர்னோ-கரபாக் குடியரசு, மற்றும் அசர்பைஜான், தெற்கே ஈரான் ஆகிய நாடுகள் உள்ளன. இதன் தலைநகரம் யெரெவான் ஆகும். ஆர்மீனியாவின் தலைநகரம் யெரெவான், அதன் நாணயம் ஆர்மீனிய திராம் (AMD).

கிறிஸ்தவத்தை அதிகாரப்பூர்வ சமயமாக அறிவித்த (கி.பி. 4 ஆம் நூற்றாண்டில்) உலகின் முதல் நாடு ஆர்மீனியா ஆகும். இங்கு 29.9 லட்சம் மக்கள் வசிக்கின்றனர். சிலுவையில் தொங்கிய இயேசுவின் விலாவில் ஈட்டியால் குத்தி இயேசு இறந்துவிட்டாரா என்று பரிசோதித்த ரோம சேவகனின் Longinus ஈட்டியிருக்கும் 2000 வருட பழமையான திருச்சபையை UNESCO வரலாற்று சிறப்பம்சமாக பராமரித்து வருகிறது.

**வேதாகமப் பின்னணி:**

ஆதியாகமத்தில், பேழை "அரராத் மலைகளில்" தங்கியதாக விவரிக்கப்பட்டுள்ளது. "ஏழாம் மாதம் பதினேழாம் தேதியிலே பேழை அரராத் என்னும் மலைகளின்மேல் தங்கிற்று" (ஆதி. 8:4).

**ஆர்மீனிய தொடர்பு:**

பண்டைய வேதாகம நிலமான ஆர்மீனியா, அரராத் மலைகளுக்கு அருகாமையில் இருப்பதாலும், நோவாவின் பேழையைச் சுற்றியுள்ள வரலாற்று மரபுகளாலும் பெரும்பாலும் "நோவாவின் நிலம்" என்று அழைக்கப்படுகிறது.

**அரராத் மலை:**

வேதாகமத்தில் "அரராத் மலைகள்" என்று குறிப்பிடும் அதே வேளையில், நவீன கால கிழக்கு துருக்கியில், ஆர்மீனியாவின் எல்லைக்கு அருகில் உள்ள மவுண்ட் அரராத் என்று அழைக்கப்படும் முக்கிய எரிமலைச் சிகரம் இந்த இடத்தின் முக்கிய அடையாளமாக மாறியுள்ளது.

**ஜோசபஸ்:**

முதல் நூற்றாண்டு வரலாற்றாசிரியர் ஜோசபஸ், பேழையின் மிஞ்சிய பாகங்கள் ஆர்மீனியாவில், கோர்டேயன்களின் (Cordyaeans) மலையில் இருப்பதாக ஆர்மீனியர்கள் நம்பினர் என்று தெரிவிக்கிறார்.

**ஆர்மீனிய பாரம்பரியம்:**

ஆர்மீனியர்கள் பாரம்பரியமாக நோவாவின் பேழை தரையிறங்கின இடத்தை மாசிஸ் என்று அழைக்கின்றனர். இதை அரராத் மலையுடன் தொடர்புப்படுத்தவில்லை. ஆனால் 11ஆம் நூற்றாண்டு வரை நோவாவின் பேழையை ஜூடி மலையுடன் தொடர்புப்படுத்தி வந்தனர்.

**ஜெபக்குறிப்புகள்:**

- ஆர்மீனியா பொதுவாக வளரும் பொருளாதாரத்தைக் கொண்ட குறைந்த நடுத்தர வருமான நாடாகக் கருதப்படுகிறது. மக்கள் தொகையில் 24.8% பேர் வறுமைக்கோட்டிற்கு கீழிருப்பதாக 2023இன் அறிக்கைத் தெரிவிக்கிறது. ஆகவே இத்தேசம் பொருளாதாரத்தில் ஒரு ஸ்திரமான நிலைக்கு வளர ஜெபிப்போம்.
- மக்கள் தொகையில் 97% பேர் கிறிஸ்தவர்களாக இருக்கும் இம்மக்கள், சாட்சியுள்ள வாழ்க்கை வாழவும். உலகின் முதல் திருச்சபையைக் கொண்டுள்ள இத்தேசத்தின் மக்கள் சுவிசேஷத்தை உலகமெங்கும் கொண்டு செல்லவும் ஜெபிப்போம்.
- இத்தேசத்தில் குற்றங்கள் குறிப்பிடும் அளவில் நிகழ்வதில்லை என்றாலும், 6000 வருடங்களாக உலகின் மிகப்பெரிய மற்றும் பழமையான மதுபான உற்பத்தி நிலையம் இங்குள்ளது. மது மற்றும் அதனால் ஏற்படும் குற்றங்கள் இத்தேசத்தை விட்டு ஒழிய ஜெபிப்போம்.

# மிஷனெரி பணியில் நம் கால மனிதர்

Rev. T. Y. P. ஆசீர், மெஞ்ஞானபுரம்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, உங்கள் யாவருக்கும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தினாலே என்னுடைய அன்பின் வாழ்த்துக்கள்.

**முதல் ஊழியம்:**

1985ஆம் ஆண்டு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட நான், ஊழிய அழைப்பைப் பெற்று 1985இல் இந்தியா கேம்பஸ் குருசேட் (Campus Crusadu for Christ) ஊழியத்தில் இணைந்து கிராமம் கிராமமாக சென்று இயேசு படக்காட்சி ஊழியத்தைச் சென்னை மணலி, அரக்கோணம், பாணாவரம், நகரி, சத்தியவேடு, புரசைவாக்கம், கன்னிகாபுரம், வியாசர்பாடி கன்னியாகுமரி, கம்பம் சமவெளி மற்றும் அரூர் போன்ற இடங்களில் ஊழியம் செய்ய ஆண்டவர் உதவி செய்தார்.

**வட இந்தியா ஊழியம்:**

இவ்விதம் தமிழ்நாட்டில் இயேசுவை அறியாதவர்கள் இருக்கும் பொழுது, வட இந்தியாவில் இதை விட அதிகமான மக்கள் இயேசுவை அறியாதவர்களாக இருளில் வாழ்கிறார்கள். இவர்களை ஆண்டவரின் சமூகத்திற்குள் கொண்டு வர வேண்டும் என்ற பாரத்தை தேவன் எனக்குக் கொடுத்தார். எனவே அந்த சிந்தையோடு வட இந்திய ஊழியத்துக்கு 1987ஆம் ஆண்டு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் என்னை இணைத்துக் கொண்டு வட இந்தியாவிற்கு புறப்பட்டு சென்றேன். 1989 - 1993 வரை மேற்கு வங்கம் மற்றும் பீகாரிலும், 1995 - 1997 வரை கான்பூர் பகுதியில் பல சவால்கள் மற்றும் எதிர்ப்புகள் மத்தியில் ஊழியத்தை நிறைவேற்றவும் ஆண்டவர் உதவி செய்தார். இதன் மூலம் அநேக சந்தால், ஹோ, சமார் இன மக்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டார்கள். 1992ஆம் வருடம் நானும், உடன் ஊழியரும் டுமரியா என்ற கிராமத்திலுள்ள மார்க்கெட்டில் கைப்பிரதிகளையும், வேதாகமத்தையும் கொடுத்துக்கொண்டிருந்தபோது, ஒருவன் என்ன செய்கிறாய்? என்று கேட்டு, நாங்கள் மயங்கிவிழும்படி அடித்தான்.இவையெல்லாவற்றிலும் நாங்கள் சோர்ந்து போகாதபடி தேவன் இன்றும் எங்களை வழிநடத்தி வருகிறார்.

**பணித்தள சாட்சிகள் சில...**

- ♥ ஜார்கண்ட் மாநிலத்தில் மகாபந்த் என்ற கிராமத்தில் நானும் என் உடன் ஊழியரும் ஒரு வீட்டை சந்தித்து கைப்பிரதி கொடுத்தோம். அந்த வீட்டிலுள்ள சகோதரி அப்பொழுது தான் குழந்தை பிறந்து மயக்கமுற்ற நிலையிலிருந்தார்கள். நாங்கள் அவர்களுக்காய் ஜெபித்தபோது தேவன் அவர்களுக்கு பெலத்தைக் கொடுத்து உடனே எழுந்து நிற்க கிருபைச் செய்தார். இப்படி அநேக சாட்சிகளைக் கர்த்தர் பணித்தளங்களில் தருகிறார்.
- ♥ டுமரியா என்ற கிராமத்தில் ஊழியம் செய்த போது, ஒரு சகோதரி இரவில் தங்க குடிசை வீடு ஒன்றை கொடுத்தார்கள். கொசுவலை போட்டுக்கொள்ளுங்கள் பூச்சிகள் வரும் என்றார்கள். இரவில் மேலிருந்து ஒரு சத்தம் வந்துக்கொண்டேயிருந்தது. காலையில் பார்க்கும்போது, கொசுவலையின் மேல் கட்டுவிரியன் பாம்பு ஒன்று படுத்துக்கொண்டிருந்தது. அவருடைய ஊழியர்களைத் தேவன் பாதுகாக்கிறவராயிருக்கிறார்.

**முன்னேற்றப்பணி ஊழியம்:**

1997ஆம் ஆண்டு முதல் இன்று வரை முன்னேற்றப்பணி ஊழியத்தைச் செய்து வருகிறேன். முன்னேற்றப்பணி ஊழியத்தில் தேவன் தந்த ஆசீர்வாதங்கள் ஏராளம். ஜெபக்குழுக்கள், ஜெபக்குழு தலைவர்கள், நன்கொடையாளர்கள் போன்றவர்களைத் தேவன் மிகுதியாக கொடுத்தார். முன்னேற்றப்பணி வளர்ச்சியை அதிகப்படுத்த, வட்டாரங்களை சிறு பகுதிகளாக பிரித்து தன்னார்வ தலைவர்களிடம் கொடுத்து முன்னேற்றப்பணி எல்லைகளை (தாம்பரம், மதுரை, தூத்துக்குடி, திருநெல்வேலி) விரிவாக்கம் செய்து ஸ்திரப்படுத்த ஆண்டவர் எனக்கு கிருபைச் செய்தார். முன்னேற்றப்பணி நாட்களில் (தாம்பரம், மதுரை, தூத்துக்குடி) எனது மனைவி ஜெபராணி மூலம் அநேக அற்புதங்களைத் தேவன் செய்தார். மேலும் பெண்களை ஊழியத்தில் செயல்பட வைத்து, அநேக வலிமைமிக்க பெண் தலைவர்களை உருவாக்கினார்கள்.

மிஷனெரி பணியின் இரண்டு கண்களில் ஒன்று பணித்தள ஊழியம், இரண்டாவது முன்னேற்றப்பணி ஊழியம். பணித்தளத்தில் ஆத்தும ஆதாயம் செய்வதும், முன்னேற்றப்பணியில் ஜெபத்தையும், பொருளாதாரத்தையும் ஒருங்கிணைப்பது இன்றைய சவாலாகவே உள்ளது.

அன்பு வாலிப தம்பி தங்கையே! நீங்கள் வாழும் இந்த ஒரே ஒரு வாழ்வில், தேவனுடைய ஆசீர்வாதத்தை இழந்து போகாதபடிக்கு, உங்களுடையத் தாலந்துகளை, திறமைகளை, வளங்களை ஆண்டவரின் பணிக்கு அர்ப்பணியுங்கள்.

**உங்கள் ஜெபம் வேண்டி...**

**மிஷனெரிப்பணியில்...**

முதலாம் தலைமுறையினர் கடந்து சென்று விட்டார்கள்.
இரண்டாம் தலைமுறையினரும் கடந்து சென்று கொண்டிருக்கிறார்கள்.
மூன்றாம் புதிய தலைமுறையினர் உருவாக...

- ✦ ஜெபக்குழுக்கள் இரண்டு மடங்காக பெருக...
- ✦ ஓடி ஓடி உழைப்பதற்கும், செயல்படுவதற்கும் இரண்டாம் கட்ட தலைவர்கள் உருவாக...
- ✦ புதிய பணித்தளங்கள் திறக்கப்பட...
- ✦ அநேக மிஷனெரிகள் எழும்ப ஜெபிப்போம்.

**"செய்ய வேண்டிய பணி ஏராளம், போக வேண்டிய தூரம் வெகு தூரம், சந்திக்கப்பட வேண்டிய ஆத்துமாக்கள் 146 கோடி"**



Rev. T.Y.P. Asir

# மன இறுக்க நோய்



"மன இறுக்க நோய்" என்பது சமூக தொடர்பின்மை, பேசுவதில் தாமதம், எண்ண ஓட்டங்களை வெளிபடுத்த இயலாமை, பாசத்தை வெளிப்படுத்த இயலாமை, உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த இயலாமை, தன்னைத் தானே காயப்படுத்துதல், உடல் வளர்ச்சி தாமதங்கள் போன்ற அறிகுறிகளைக் கொண்ட ஒரு வளர்ச்சி நிலை. இது பொதுவாக குழந்தைப் பருவத்தில் தெளிவாகத் தெரிகிறது. மரபியல் கோளாறு, பிறப்பில் குறைந்த எடை, வளர்சிதை மாற்றத்தில் ஏற்றத்தாழ்வுகள், வைரஸ் நோய்த்தொற்றுகள், வயதான தம்பதியருக்கு பிறப்பது, சில மருந்துகள் உட்கொள்வதால் ஏற்படும் பின் விளைவுகள் போன்ற காரணங்களால் ஏற்படுகிறது. நோயறிதல் நடைமுறைகள் மற்றும் விழிப்புணர்வு நிலைகளைப் பொறுத்து, மன இறுக்க பாதிப்பின் விகிதம் வேறுபடுகின்றன...

உலக மன இறுக்கம் விழிப்புணர்வு தினம் (World Autism Awareness Day) ஏப்ரல் 2ஆம் தேதி கடைபிடிக்கப்படுகிறது. மேலும் ஏப்ரல் மாதம் முழுவதும் இக்குறைபாட்டால் பாதிக்கப்பட்டவர்களை எப்படிக் கையாள வேண்டும், எந்த முறையில் அனுசரித்து நடந்துகொள்ள வேண்டும் என்பதை உணர்த்தும் வகையில் இந்நாள் அனுசரிக்கப்படுகிறது. இக்குறைபாட்டை முற்றிலும் குணப்படுத்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

மன இறுக்க நோயால் பாதிக்கப்பட்டவர்களில், பல பிரபலங்களும் உள்ளனர். இவர்கள் தங்களுடைய திறமைகளைப் பயன்படுத்தி அற்புதமான விஷயங்களைச் செய்து வெற்றியும், புகழும் அடைந்துள்ளனர். உதாரணத்திற்கு: எலோன் மஸ்க் (Elon Musk), நிகோலா டெஸ்லா (Nikola Tesla) மற்றும் பலர்...





மன இறுக்க நோயால் பாதிக்கப்பட்டவர்களை, ஆரம்ப காலத்திலேயே கண்டுபிடித்துவிட்டால், அவர்களுக்கு பேச்சு பயிற்சி, செயல்முறை பயிற்சி மற்றும் நடத்தை பயிற்சி கொடுத்து அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை கணிசமாக மேம்படுத்த முடியும். இவர்கள் தங்கள் பெற்றோர் மற்றும் பொறுப்பாளர்களால் கவனிக்கப்பட்டு நிறைவான வாழ்க்கையையே வாழ்கின்றனர்.

### புள்ளிவிவரங்கள்:

1. உலக சுகாதார அமைப்பின் கூற்றுப்படி, உலகளவில் சுமார் 100 குழந்தைகளில் ஒருவருக்கு மன இறுக்க நோய் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.
2. இந்தியாவில் மன இறுக்க நோய் குறித்த தேசிய புள்ளிவிவரங்கள் குறைவாகவே உள்ளன. இருப்பினும் இந்தியாவில் 10 வயதிற்குட்பட்ட 100 குழந்தைகளில் குறைந்தது ஒரு குழந்தைக்கு மன இறுக்க நோய் குறைபாடு இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
3. இப்படிப்பட்ட மரபியல் கோளாறு பொதுவாக பெண் பிள்ளைகளை விட, நான்கு மடங்கு அதிகமாக ஆண் பிள்ளைகளையே பாதிப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

### ஜெபக்குறிப்புகள்:

- மன இறுக்க நோயால் பாதிக்கப்பட்டவர்கள் மன இறுக்கம் நீங்கி, அமைதி மற்றும் சந்தோஷத்துடன் இருக்க, மன உளைச்சலில் இருந்து விடுதலைபெற
- பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்கள் தேவனிடமிருந்து அன்பு, பொறுமை, புரிதல், மற்றும் சகிப்புத்தன்மை போன்றவைகளைப் பெற்றுக்கொள்ள
- இவர்கள் வாய்மொழி அல்லது வாய்மொழி அல்லாத தகவல்தொடர்புத் திறன்களை வளர்த்துக் கொள்ள
- ஒவ்வொரு பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கும் பள்ளிகளில் தரமான கல்வி பாரபட்சமின்றி கிடைக்க, இவர்களுக்கு ஆசிரியர்களிடமிருந்தும், சிகிச்சையாளர்களிடமிருந்தும் சிறந்த வழிகாட்டுதல் மற்றும் அறிவுரைகள் கிடைக்க
- இவர்கள் சமூகத்தில் உள்ளவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட, இவர்களுக்கு மற்றவர்களைப் போல நல்ல தரமான வாழ்க்கைமுறை அமைய ஜெபிப்போம்.




AUTISM SPECTRUM DISABILITY

Mrs & Mr. Godwin

PRAYER POINTS - DISABILITIES



# சித்தி மக்கள்

இன்றும் ஆப்பிரிக்கர்கள் இந்தியாவில் வாழ்கிறார்கள் என்றால் உங்களால் நம்ப முடிகிறதா? ஆம்! இந்தியாவின் குஜராத், மகாராஷ்டிரா மற்றும் கர்நாடகா மாநிலங்களில் வாழும் ஆப்பிரிக்க மக்கள் தான் சித்தி மக்கள்.

**பூர்வீகம்:**

போர்ச்சுக்கீசிய வியாபாரிகள் மூலமாக பருச் துறைமுகம் வாயிலாக ஜுனா காட் நவாப்புக்கு அடிமைகளாக கொண்டு வரப்பட்டவர்கள் இந்த சித்தி மக்கள். இவர்கள் கிழக்கு ஆப்பிரிக்காவின் பன்டு சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்.

**வாழ்விடம்:**

குஜராத் மாநிலம் சோம்நாத் மாவட்டத்திலும், கர்நாடகா மாநிலம் பெல்காம் மற்றும் தார்வட் மாவட்டங்களிலும், மகாராஷ்டிரா டையு டாமன் பகுதிகளில் சுமார் 1,50,000 பேர் வாழ்கின்றனர்.

**தொழில்:**

விவசாயம் மற்றும் பல்வேறு துறைகளில் கூலி பணியாளர்களாகவும், சில இடங்களில் கொத்தடிமைகளாகவும் வாழ்கின்றனர். இவர்கள் உற்பத்தி செய்யும் பழைய துணிகளால் உருவாக்கப்பட்ட மெத்தைகள் மிகவும் பிரசித்தி பெற்றவை. இது குளிர்காலங்களுக்கு மிகவும் ஏற்றது. இதில் மத அடையாளங்களைக் கூட பதிக்கிறார்கள்.

**மத நம்பிக்கைகள்:**

குஜராத்தில் 98.7% இஸ்லாமியர்களும், கர்நாடகாவில் 41.8% இந்துக்கள், 30.6% இஸ்லாமியர்கள், 27.4% கத்தோலிக்க கிறிஸ்தவர்களும் உள்ளனர். “கிரியாரு” என்ற மூதாதையர் ஆவி வணக்கம் இவர்கள் மத்தியிலுண்டு. இறந்த உறவினர்கள், ஆவியாக தம்மை சூழ்ந்து வாழ்வதாக நம்புகிறார்கள். அதனால் பிறப்பு, திருமணம், இறப்பு போன்ற நிகழ்வுகளில் ஆவிகள் அழைக்கப்படுகிறார்கள். அதோடு “பாவாகோர்” என்ற மத குருவின் கல்லறையையும் வணங்குகிறார்கள்.

**கலாச்சாரம்**

2003ஆம் ஆண்டு வரை நாடோடி மக்கள் பட்டியலில் இருந்த இவர்கள் அதற்குப் பிறகு பழங்குடியினர் பட்டியலுக்கு மாற்றப்பட்டுள்ளனர். குஜராத்தில் சித்தி மக்கள் குறிப்பாக பாதிக்கப்படக்கூடிய பழங்குடி மக்கள் (PVTGs) பட்டியலில் உள்ளனர். சித்தி மக்கள் கருப்பாக இருப்பதால் தாழ்வாக பார்க்கப்படுகின்றனர். மேலும் தலித் மக்களைப் போல இவர்களிடமும் தீண்டாமை என்னும் பாகுபாட்டைக் கடைபிடிக்கின்றனர். இவர்கள் மற்ற மக்களால் தீண்டாமை என்னும் கொடுமையை அனுபவிக்கின்றார்கள். இவர்கள் இந்தியாவில் வாழ்வதால் அவர்கள் வாழ்கின்ற பகுதியில் பேசப்படும் மொழியையே பேசுகின்றனர். ஆனாலும் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த பன்டு சமுதாய கலாச்சார நடனமான “தமால்” நடனத்தை இன்றும் நடனமாடுகின்றனர். இது வேட்டையாடுதலை மையமாகக் கொண்டது. உடை இல்லாத உடலின் மேல் புலி போன்ற மிருகங்களின் உருவங்களை வண்ணமாக வரைந்து வித்தியாசமாக நடனமாடுகின்றனர். பெரும்பாலும் சித்தி சமுதாயத்தைச் சேர்ந்த பெண்கள் கர்ப்பகாலங்களில் ரத்தசோகையால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். குழந்தைகளுக்கும் போதிய சத்தான ஆகாரம் கிடைப்பதில்லை. இவர்கள் வாழ்விடம் காட்டுப்பகுதியானதால், சிறுவர்கள் பள்ளிக்கூடம் செல்வதில்லை.

**நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்கள்:**

கர்நாடகா மாநிலத்தில் முண்ட்கோட் பகுதியில் சகோ. கொங்கா கிரிபாபு அவர்கள் மூலம் ஊழியத்தை ஆரம்பித்துள்ளோம். இங்கு 10 விசுவாச குடும்பங்கள் நமக்குண்டு.

**ஜெபியுங்கள்:**

- ✦ இங்குள்ள மக்களின் ஆவி வணக்கம் மாறி, உண்மையான தேவனை அறிந்துக்கொள்ள…
- ✦ சித்தி மக்களை வதைக்கும் தீண்டாமை என்னும் கொடுமை மாற…
- ✦ நல்ல உடல் பெலங்கொண்ட இவர்களுக்கு விளையாட்டுத் துறையில் வாய்ப்புகள் கிடைக்க…
- ✦ இன்னும் ஏராளமான மிஷனெரிகள் எழும்பி இங்கு அனுப்பப்பட…
- ✦ இவர்கள் மொழியில் (கொன்கனி) மொழிபெயர்க்கப்பட்டுள்ள புதிய ஏற்பாடு இவர்களால் பயன்படுத்தப்பட ஜெபிப்போம்.



Mr. Suriya Kumar

Ms. Lily Reaiah Grace



# வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி

## (Foreign Employment Scam)

"மியான்மரில் உள்ள சைபர் மோசடி மையங்களிலிருந்து 549 இந்தியர்கள் மீட்கப்பட்டனர்" என்பது மார்ச் 12, 2025இல், இந்துஸ்தான் டைம்ஸின் செய்தி.

இந்த செய்தியை கேட்ட / வாசித்தவர்களுக்கு, யார் இந்த 549 இந்தியர்கள்? மியான்மரில் எப்படி சிக்கினார்கள்? சைபர் ஸ்கேம் சென்டரில் என்ன செய்துக்கொண்டிருந்தார்கள்? என அநேக கேள்விகள் எழும்பியிருக்கும். வேலைத் தேடி சலித்த நிலை, தேடிவரும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு விளம்பரம், இவ்விரண்டும் ஒன்றோடு ஒன்று சந்திக்கும் போது நிகழும் விபரீதம் தான் இந்த வெளிநாட்டு வேலைவாய்ப்பு மோசடி.

சட்டப்பூர்வ வேலைவாய்ப்பு என்ற பொய்யான வாக்குறுதிகளின் பேரில், இந்திய இளைஞர்களை ஏமாற்றி (தாய்லாந்து, மியான்மர், கம்போடியா) வெளிநாடுகளுக்கு கடத்துவதில் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட கடத்தல் கும்பல் ஈடுபட்டுள்ளது. "டிஜிட்டல் சேல்ஸ்" (Digital Sales) மற்றும் "மார்க்கெட்டிங் நிர்வாகி" (Marketing Executives) அல்லது "வாடிக்கையாளர் ஆதரவு" (Customer Support Service) போன்ற பதவிகளுக்கான வேலை வாய்ப்புகளாக விளம்பரப்படுத்தி, பின்னர் இளைஞர்களைப் போலி அழைப்பு மையங்களில் (Fake Call centers) வேலை செய்யவும், ஆன்லைனில் சட்டவிரோத நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் கட்டாயப்படுத்துகிறார்கள்.

இந்த போலி வேலைவாய்ப்புகள் சந்தேகத்திற்குரிய நிறுவனங்களால் வெளியிடப்பட்டாலும், பெரும்பாலான நேரங்களில் தரமான நிறுவனங்கள் வழங்கும் உண்மையான வேலைவாய்ப்புகளைப் போன்றே நம்பக்கூடிய வகையில் அமைந்துவிடுகின்றன.

இதுபோன்ற போலி வேலை வாய்ப்புகளைக் கண்டறிந்து தவிர்க்க வல்லுனர்கள் பல ஆலோசனைகளை முன்வைக்கிறார்கள் அதில் சில,

- ஒரு சட்டப்பூர்வ நிறுவனம் ஒரு தொழில்முறை வலைத்தளத்தையும் (Professional Website) தெளிவான தொடர்பு விவரங்கள் மற்றும் நேர்மறையான மதிப்புரைகளையும் (Reviews) கொண்டிருக்கும்.
- ஒரு குறிப்பிட்ட நாட்டில் இருப்பதாகக் கூறும் ஒரு நிறுவனத்திடமிருந்து ஒருவர் Job Offer பெற்றால், அந்த நாட்டின் அரசாங்கத்தில் அதன் பதிவையும் (Registration), அந்நாட்டில் அந்த நிறுவனம் பதிவுசெய்யப்பட்டு செயல்பட உரிமம் (License) பெற்றுள்ளதா என்பதையும் சரிபார்க்கவும்.
- உதவிக்காக நாட்டில் உள்ள இந்திய தூதரகத்தை (Embassy) அணுகுவது சிறந்தது.
- பயனரிடமிருந்து சேகரிக்கப்பட்ட தகவலின் (User information) நிலையை அறிய வலைத்தளத்தின் தனியுரிமைக் கொள்கையைச் (Privacy Policy) சரிபார்க்கவும்.
- சட்டப்பூர்வ நிறுவனங்கள் பொதுவாக Professional Documentation-யை கொண்டிருக்கும், Job Offerஇல் இலக்கணம் மற்றும் எழுத்துப் பிழைகள் இருந்தால் அது போலி என அறியலாம்.
- இவைகளை அறியாமல் ஏமாற்றப்பட்டு வெளிநாடுகளில் இன்னும் சிக்கியுள்ளவர்களின் மீட்புக்காக ஜெபிக்க நாம் கடமைப்பட்டுள்ளோம்.

### ஜெபக்குறிப்புகள்:

- சிக்கித் தவித்த இந்தியர்களில் இதுவரை மீட்கப்பட்டவர்களுக்காக தேவனைத் துதிப்போம்.
- இன்னும் Cambodia, Thailand, Myanmar, Africa ஆகிய நாடுகளில் சிக்கித்தவிக்கும் இளைஞர்கள் விரைவில் மீட்கப்பட்டு, தங்கள் குடும்பங்களுடன் இணைக்கப்பட ஜெபிப்போம்.
- இக்குற்றங்களில் ஈடுபடுபவர்கள் மனம்திரும்ப, பிடிபட்டு சீர்திருத்தம் அடைய ஜெபிப்போம்.
- நம் தேசத்தில் நிலவும் வேலை வாய்ப்பின்மை நிலை மாறி, இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகள் அதிகரிக்கப்பட ஜெபிப்போம்.
- இந்திய வெளியுறவுத் துறை, தூதரகங்கள், சைபர் குற்றப்பிரிவு மற்றும் வெளிநாட்டு காவல்துறை அதிகாரிகள் ஞானத்துடன் விரைந்து செயல்பட ஜெபிப்போம்.



# தென் பிராந்திய சர்ச் கவுன்சில் - தேன்கனிக்கோட்டை

(நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் அங்கம்)

# ஜவனசந்திரம் திருச்சபை வரலாறு



PRAYER POINTS -BACK TO REVIVAL

Rev. Ruban Ramalingam

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், பெட்டமுகிலாலம் என்கிற பெரியமலைப் பஞ்சாயத்துக்குட்பட்ட கிராமம் தான் ஜவனசந்திரம். இக்கிராமத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் விவசாயத்தையே நம்பி வாழ்ந்து வருகின்றனர். இங்கு மழை பெய்தால் தான் விவசாயம் என்பதால் இவர்கள் பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கியிருக்கின்றனர். இவர்களில் அதிகமானோர் தற்போதுவரை போதை வஸ்துகளுக்கும், மந்திர தந்திரங்கள் மற்றும் விக்கிரக வணக்கத்திற்கும் அடிமையாகியுள்ளனர். எந்த அடிப்படை வசதிகளும் இல்லாத இப்பகுதியில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மிஷனெரியான அருட்திரு. வி. தாமஸ் அண்ணன் அவர்கள் குடும்பமாக 35 ஆண்டுகளுக்கு முன்பு இங்கு வந்து கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவித்தார்கள்.

இக்கிராமத்தில் பிசாசு பிடியினால் அவதிப்பட்டு வந்த திரு. அப்பாஜி அவர்கள் எத்தனையோ மந்திரங்கள் மற்றும் பூஜைகள் செய்தும், எவ்வித பலனும் இல்லாமல் மிக வேதனையோடு இருந்தபோது நமது மிஷனெரி அண்ணன் அவர்கள், நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம், நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும் என்று சொல்லி அவருக்காக ஜெபித்தபோது, தேவன் அவருக்கு பரிபூரண சுகத்தைக் கொடுத்ததால் மிகவும் சந்தோஷப்பட்டு இயேசு கிறிஸ்துவைக் குடும்பமாக ஏற்றுக் கொண்டனர். ஆதலால் அவரது சொந்த கிராமத்திலேயே அவருக்கு மிகுந்த எதிர்ப்பு உண்டானது. ஆனாலும் கிறிஸ்துவின் மீதுள்ள நம்பிக்கையை இவர் விட்டுவிடவில்லை. இவரது விசுவாசத்தைக் கண்ட அக்கிராமத்திலுள்ள திரு. நாராயணப்பா மற்றும் திரு. ருத்ரப்பா ஆகியோரும் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு திருமுழுக்குப் பெற்றனர். இதனால் மேலும் எதிர்ப்புகள் அதிகமாகி பொதுப்பாதையில் நடக்கக்கூடாது, குடித்தண்ணீர் எடுக்கக்கூடாது, அவர்களது வீட்டு நிகழ்ச்சிகள் எதுவாயினும் அவைகளில் யாரும் கலந்துக் கொள்ளக் கூடாது என கடுமையான ஊர் கட்டுப்பாடுகளைக் கொண்டு வந்தனர். அவைகளின் மத்தியிலும் நமது விசுவாசிகள் சோர்ந்துப்போகாமல் விசுவாசத்தில் வளர்ந்தனர். ஆகையினால் விசுவாசிகளின் எண்ணிக்கைப் பெருகியது.

நமது துணை இயக்கமான நவ ஜீவன் சேவா மண்டலம் மூலமாக அக்கிராமத்தில் ஆழ்துளைக் கிணறு அமைக்கப்பட்டு, குடிநீர் வசதி செய்து தரப்பட்டது. அப்பகுதியில் தொடர்ந்து நடைபெற்ற ஊழியத்தினால் பலர் இயேசு கிறிஸ்துவின் மேல் விசுவாசம் வைத்தனர். ஆனாலும் அவர்கள் எல்லோரும் கூடி ஆராதிக்க இடமில்லாத நிலையில் ஆலயத்திற்கு நிலம் வாங்கப்பட்டு, அதில் சிற்றாலயம் கட்டவும், அதில் கூடி ஆராதிக்கவும் சர்வ வல்லமையுள்ள தேவன் கிருபைச் செய்தார். தொடர்ந்து விசுவாச குடும்பங்களின் எண்ணிக்கைப் பெருகியதால், சிற்றாலயத்தை இடித்து 2012ஆம் ஆண்டு பெரிய ஆலயம் கட்டி, அங்கே தேவனை ஆராதிக்கத் துவங்கினர். பல பதட்டமான சூழ்நிலைகள் மற்றும் எதிர்ப்புகள் மறைந்து, தற்போது 22 குடும்பங்களாக அவ்வாலயத்தில் சர்வ வல்ல தேவனை மகிமைப்படுத்தி வருகின்றனர்.

**துதிக்க:**

★ இரவு நேரத்தில் நமது திருச்சபை மூப்பர் திரு. அப்பாஜி அய்யா அவர்களைக் கொடிய விஷ பாம்பு கடித்து மரணத் தருவாயிலிருந்தார். விசுவாசிகள் ஒன்றுகூடி பாரத்தோடு அவருக்காக ஜெபித்ததின் விளைவு தேவன் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.


★ திருச்சபை விசுவாசியான திரு. ஜெபராஜ் அவர்கள் நமது ஊழியத்திற்காக தனது வருமானத்தில் ஒரு பகுதியை மாதந்தோறும் கொடுத்து வருகின்றார். அவருக்கு தேவன் மூன்று இலட்சம் மதிப்பிலான ஒப்பந்தப்பணி கிடைக்க கிருபைச் செய்தார்.

**ஜெபிக்க:**

★ இத்திருச்சபையைச் சுற்றியுள்ள கிராமங்களில் மக்கள் இரட்சிக்கப்படவும், பின்வாங்கியோர் மனந்திரும்பி மீண்டும் ஆலயம் வரவும் ஜெபிப்போம்.

★ விக்கிரக வணக்கத்திலும், மூடபழக்கவழக்கங்களிலும், குடியின் அடிமைத்தனத்திலும் இருக்கும் இம்மக்கள் இதிலிருந்து விடுதலைப்பெற ஜெபிப்போம்.

# ஜெபிக்கலாம் வா... VIRAL NEWS



## PRAY FOR TERRORISTS

**50 Killed and 100 Under Hostage**

தீவிரவாதிகள் மனம்மாற, அவர்களால் அப்பாவி ஜனங்கள் பாதிப்படையாதிருக்க ஜெபிப்போம்.



## PRAY FOR MANIPUR

**மீண்டும் வன்முறை**

வன்முறைகளைத் தூண்டுகிற பொல்லாத சத்துருவின் கிரியைகள் முறியடிக்கப்பட, தேசத்தில் சமாதானம் நிலவ ஜெபிப்போம்.



## PRAY FOR YOUTH IN ADDICTION

**ஆன்லைனில் விளையாடவிடாததால் தாய், தந்தை, அக்கா என 3 பேரை அடித்துக் கொன்ற கல்லூரி மாணவன்**

ஆன்லைன் அடிமைதனத்திலிருப்போர் விடுதலைப் பெற ஜெபிப்போம்.


## PRAY FOR ILLEGAL TRADE

**உளுந்தூர்பேட்டை அருகே 12 கிலோ கஞ்சா பறிமுதல்**

கஞ்சா, போதை பொருள்கள் சட்டவிரோதகமாக கடத்தப்படுவது தடைசெய்யப்பட, அவைகளால் அதிகரிக்கும் குற்றச் செயல்கள் கட்டுப்படுத்தப்பட ஜெபிப்போம்.




## PRAY FOR ENVIRONMENTAL CHANGES



"Doomsday fish" — found on shore Warns natural disaster




Thousands of fish comes ashore in Kerala

"Angler fish" - that lives 2000 meters underwater Is spotted near sea surface in Kerala

தேசத்தில் / உலக நாடுகளில் பேரழிவு நடக்காதிருக்க ஜெபிப்போம்.

## PRAY FOR SALVATION



**Odisha - 1 month baby - உடல் சுகவீனம் 40 முறை சூடு வைத்தால் சரியாகும் என நம்பிக்கை**

அறியாமையினால் மூடபழக்கத்தில் சிக்கியிருக்கும் மக்கள் இரட்சிக்கப்பட, உண்மைத் தெய்வமான இயேசு கிறிஸ்துவைக் கண்டுகொள்ள ஜெபிப்போம்.

PRAYER POINTS - TRENDING NEWS

Mr. Hutson & Mrs. Gifta

# தோட்டக்காரர் ஊழியம்

3rd WEEK MESSAGE

JESUS MISSION

Mr. Isaac Kamalesh

இயேசுவின் உயிர்த்தெழுதல் நான்கு சுவிசேஷங்களில் சொல்லப்பட்டிருந்தாலும், உயிர்த்தெழுதலில் வரும் ஒரு வார்த்தை மகதலேனா மரியாள் அவரைத் **“தோட்டக்காரர் என்று எண்ணி”** என்று சொல்லப்பட்டதை நாம் யோவான் 20:15இல் வாசிக்கிறோம். யோவான் 20:14இல் “அவரை இயேசு என்று அறியாதிருந்தாள்” என்று வாசிக்கிறோம். ஏனெனில் இது அதிகாலை, அதிக இருட்டு என்று அநேகர் சொல்லுகிறார்கள். அப்படி அல்ல என்று உறுதியாக சொல்ல முடியும். ஏனென்றால் கல்லறையினிடத்திற்கு சென்ற பெண்கள் கல் புரட்டப்பட்டிருக்கிறதைக் கண்டு, சீஷர்கள் தங்கியிருந்த சீயோனிற்கு ஓடி அறிவித்தார்கள். பின்பு சீஷர்கள் கொல்கொதாவிற்குத் திரும்பி வரும் தூரம் கணக்கிட்டால், அது காலையாக இருக்கும் என்பதால் இருட்டு ஒரு காரணமல்ல. அப்படியென்றால் அவரை இயேசு என்று மரியாள் அறியாதிருந்தாள் என்றால் என்ன? இதுவே இச்செய்தியின் சாராம்சம்.

சரி! இனி செய்திக்குள் வருவோம். இப்பொழுது தூதர்கள் முதலாவது மரியாளிடம் கேட்டது ‘ஸ்திரீயே ஏன் அழுகிறாய்?’ என்று. இதன் பதிலை வேதத்தில் பார்க்கலாம். மீண்டும் இயேசு மரியாளை நோக்கி ‘நீ ஏன் அழுகிறாய்?’ யாரைத் தேடுகிறாய்? என்றார். இயேசு மரியாளை நோக்கி “மரியாளே” என்றார். அதற்கு மரியாள் “ரபூனி” என்றாள். பின்குறிப்பு- இயேசுவின் காலத்தில் “லத்தீன்”, “கிரேக்கம்”, “எபிரெய மொழி” மற்றும் “அரேபிய மொழி” போன்ற நான்கு மொழிகள் நடைமுறையிலிருந்தது.

இதில் இயேசு மரியாளிடம் பேசியது முதல் இரண்டு மொழியல்ல என்பது உறுதியாகிறது. மூன்றாவது எபிரெய மொழி, இதையும் இயேசு பயன்படுத்தியிருக்க முடியாது. ஏனென்றால் இது பண்டிகை நாட்களிலும் மற்றும் ஆலயத்தில் மட்டுமே பயன்படுத்திய மொழி. இப்பொழுது அராபிய மொழிக்கு வருவோம். இது ஒவ்வொரு இடத்திற்கு ஏற்றவாறு சற்று மொழி நடை மாறும். இயேசு பிறந்து வளர்ந்து ஊழியம் செய்த பகுதியில் அராபிய மொழி நடையும், மகதலேனா மரியாள் பேசிய அராபிய மொழியும் ஒரேநடை. எனவே இயேசு கலிலேயா பகுதியைச் சார்ந்த மொழியை பேசவில்லை. பேசியிருந்தால் மரியாள் கண்டுபிடித்திருப்பாள். ஆனால் இயேசு பேசிய மொழியின் நடை, எருசலேம் பகுதியில் வாழும் மக்களின் மொழி நடை. எனவேதான் மரியாள் இவரை இயேசு என்று அறியாமல், இந்த பகுதியில் வாழும் ஒரு நபர் என்றும், இந்த தோட்டத்தின் உரிமையாளர் என்றும் அவரைக் கணித்து, இயேசுவை “தோட்டக்காரர் என்று எண்ணி” என்று யோவான் தெளிவாக பதிவு செய்கிறார்.

சரி! நாம் சாராம்சத்திற்குள் செல்வோம். இயேசு ஏன் கலிலேய பகுதி மொழியைப் பின்பற்றாமல் எருசலேம் பகுதி மொழியைப் பயன்படுத்தினார். மரியாள் இயேசுவை தோட்டக்காரர் என்று நினைக்கவைக்க காரணம் என்ன? இயேசுவின் தெய்வத்துவத்தின் அடையாளமாகிய “தோட்டக்காரன்” என்ற நிலையை ஒரு ஸ்திரீ அறிக்கைச் செய்ய வேண்டும் என்ற தெய்வத்திட்டமே தவிர வேறொன்றுமில்லை. எனவே தான் இயேசு இந்த வார்த்தையை ஏற்றுக் கொண்டது போல், நான் தோட்டக்காரன் அல்ல என்று மறுக்காமல், அதை அமைதலுடன் ஏற்றுக் கொண்டார். இன்னும் சொல்லப்போனால் கடவுளின் முக்கிய ஊழியமான அந்த தோட்டக்கார ஊழியத்தை நான் (இயேசு) நிறைவேற்றிவிட்டேன் என்ற முழு திருப்தியோடு அமைதலாக ஏற்றுக் கொண்டிருக்கலாம்.

இப்பொழுது நீங்கள் யோசிப்பது எனக்கு புரிகிறது. ஏன் இந்த செய்தியை இப்படி குழப்புகிறீர்கள்? அல்லது இப்பொழுது என்னதான் சொல்லப்போகிறீர்கள்? என்று. உங்கள் மனநிலைப் புரிகிறது சற்று நிதானத்துடன் தோட்டக்கார ஊழியத்தை இயேசு எப்படி நிறைவேற்றினார் என்றும், இன்று நீங்கள் இந்த ஊழியத்தை எப்படி தொடரலாம் என்றும் கூறி முடிக்கிறோம். கவனமாக பின் தொடருங்கள்.

வேதத்தில் ஒரு சில தோட்டங்கள் குறிப்பிடப்பட்டிருந்தாலும், பழைய ஏற்பாட்டில் ஏதேன் தோட்டமும், புதிய ஏற்பாட்டில் கெத்சமனே தோட்டமும் நாம் புரியும் வண்ணமுள்ளது. இயேசுவானவரை சிலுவையில் அறைந்த கொல்கொதா இருந்த இடமும் ஒரு தோட்டம் என்பதை யோவான் 19:41இல் புரிந்து கொள்ள வேண்டும். *There was Garden* என்று ஆங்கில வேதாகமத்தில் தெளிவாக உள்ளது. ரோமர்கள் அந்நாட்களில் அநேகரைச் சிலுவையில் அறைந்து தண்டனைக் கொடுத்தனர். சிலுவையில் அறையுமிடம் எப்போதும் தெருசந்தியாகவே இருக்கும். முதல் முறையாக இயேசுவை கொல்கொதா என்ற அந்த தோட்டத்திலுள்ள சிறுக்குன்றின் மேல் அறைய ஒப்புக் கொடுத்தார்கள். இதுவும் தெய்வதிட்டம்தான். அதுமட்டுமல்ல, இயேசு கைது செய்யப்பட்டது, சிலுவையில் அடிக்கப்பட்டது, உயிர்த்தெழுந்தது எல்லாம் தோட்டத்தில் தான்.



இப்பொழுது ஆதியாகமம் செல்வோம். தேவன் ஆறு நாட்களில் தனது சிருஷ்டிப்பை முடித்து ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார். அதோடு அவருடைய சிருஷ்டிப்பு முடிந்துவிட்டது என்றால் "ஆம்" ஆனால் இல்லையென்றும் சொல்லலாம். ஏனென்றால் அதன் பிறகு கிழக்கிலே ஏதேன் என்னும் தோட்டத்தை உருவாக்கினார் (ஆதி. 2:8) என்று வேதம் சொல்லுகிறது. ஆதியாகமத்தில் மேலும் 2 இடங்களில் தோட்டத்தை உண்டாக்கினச் செய்தியிருக்கிறது. ஒன்று நோவா (ஆதி. 9:20), மற்றொன்று ஆபிரகாம் (ஆதி. 21:33) மூன்றிலும் சொல்லப்பட்டது ஒரே வார்த்தை தான். இப்பொழுது ஒன்றை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்பொழுது தோட்டத்தில் நடந்தது நமக்கு நன்றாகத் தெரியும். மனிதன் பாவம் செய்யும்போது தேவன் தோட்டத்திலிருந்து அவனை வெளியேற்றி இரண்டு சுடரொளி பட்டயத்தை வைக்கிறார் (3:24). நாம் கற்பனைப் பண்ணி பார்ப்போம். இந்த நிகழ்வுக்கு பின்பு எத்தனை முறை ஆதாமும், ஏவாளும் கிழக்கிலுள்ள அந்த வாசலுக்கு வந்து மீண்டும் அந்த வாய்ப்பு கிடைக்காதா என்று ஏக்கத்தோடு பார்த்து திரும்பிச் சென்றிருப்பார்கள். இந்த ஏக்கத்தை நினைப்பூட்டும் வண்ணமாக தேவன் மோசேயைக் கொண்டு ஆசரிப்புக் கூடாரத்தைச் செய்ய சொல்லும்போது பரிசுத்த ஸ்தலத்திற்கும், மகா பரிசுத்த ஸ்தலத்திற்கும் அதை பிரிக்கும் வண்ணம் திரைச் சீலையை உண்டு பண்ண சொன்னார். அந்த திரைச்சீலை தடிமனான மூன்று நூலையும், ஒரு மெல்லிய நூலாலும் செய்யப்பட்டது. மேலும் அந்த திரைச்சீலையில் விசித்திர வேலையாக கேருபீன்களை வைக்கச்சொன்னார். இப்போது மீண்டும் கற்பனைச் செய்து பார்ப்போம். மனிதன் வெளிப்பிரகாரத்திலிருந்து மகா பரிசுத்த ஸ்தலத்தைப் பார்க்கும் பொழுது சுடரொளி பட்டயத்தைப் பார்த்துவிட்டு, மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்ல முடியாமல் ஏக்கத்தோடு சென்றிருக்க வேண்டும்.

இயேசுவின் சிலுவை மரணத்திற்கு வருவோம். ஏழாவது வார்த்தையை அவர் சொல்லி முடித்த பின்பு பூமி அதிர்ச்சி மற்றும் திரைச்சீலை இரண்டாக கிழிந்ததை நாம் பார்க்கிறோம். அதாவது மனிதனின் ஏக்கம் தீர்க்கப்படுகிறது. எல்லோரும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் செல்லும் உரிமையைப் பெற்றோம். அதாவது மீண்டும் நாம் ஏதேனுக்குள் செல்லும் சிலாக்கியத்தைப் பெற்றோம். கடைசியாக நாம் பரலோகத்திற்குச் செல்லும் நிகழ்விலும், பரலோகம் ஒரு தோட்டமாக வர்ணிக்கப்படுகிறது (வெளி. 22:1, 2). இனி செய்தியின் கடைசிப் பகுதிக்கு வருவோம். இயேசு மரித்த கொல்கொதா ஒரு தோட்டம் என்று பார்த்தோம். வரலாற்றுக் குறிப்பின்படி அந்தத் தோட்டம் ஒரு திராட்சைத் தோட்டம். மரியாள் அவரை திராட்சை தோட்டக்காரன் என்று சொல்லியிருந்தாள். இப்பொழுது உங்களுக்கு வசனம் ஞாபகத்துக்கு வருகிறதா. நீங்கள் நினைத்தது சரியே. அது யோவான் 15:1 தான்.

**"நான் மெய்யான திராட்சைச் செடி, என் பிதா திராட்சைத் தோட்டக்காரர்". இயேசு இப்பொழுது பிதாவாக இந்த பூமியில் நிற்கிறார். பிதாவை யாரும் தொட முடியாது. இதைப் புரிந்து கொள்ளத்தான் மரியாளைப் பார்த்து என்னைத் தொடாதே என்று சொன்னார். (பின்பு தோமாவிடம் தன்னைத்தொட அனுமதி கொடுத்தார்) இந்த தோட்டக்கார ஊழியத்தை இயேசு சரியாக நிறைவேற்றி முடித்துவிட்டார். நீயும், நானும் மீண்டும் அந்த தோட்டத்திற்குள் சென்று அவரோடு உலாவலாம். இயேசு வழியாக நம் தேச ஜனங்கள் அனைவரையும் தோட்டத்திற்குள் அழைத்துச் செல்ல வேண்டும். அதற்கு அவசியம் நீ வேண்டும்.**

**உனக்கு எங்கள் இயேசு உயிர்தெழுதலின் நல்வாழ்த்துக்கள்!**

(7ஆம் பக்கத் தொடர்ச்சி)

### III. ஏதோமின் கொடுமையும், அதன் மறுமொழியான கடுமையும்:

பகைமை மனதில் உணர்வது; கொடுமையோ செயலில் விளைவது. கொடுமையான செயல்களை நம் தேவன் தனக்கு எதிரான குற்றமாகவே கருதுகிறார். "துன்மார்க்கனையும் கொடுமையில் பிரியமுள்ளவனையும் அவருடைய உள்ளம் வெறுக்கிறது" (சங்கீதம் 11:5)

**ஏதோமியர்களின் கொடுமையின் செய்கைகள் (Action of Cruelty)**

**1. ஆஸ்தியில் கை போட்டார்கள் (v.13)** - பகைவர்கள் இஸ்ரவேலை கொள்ளையிட்டபோது, ஏதோமியர்களும் தங்கள் பங்கிற்கு அவர்களைக் கொள்ளையிட்டார்கள்.

**2. வழிமறித்தார்கள் (v.14)** - பகைவர்களுக்கு அஞ்சி அவர்கள் ஏதோமியர்களின் எல்லைக்குள் ஓடிய போது அவர்களைத் தப்பிச்செல்ல வழிவகை செய்யாமல், வழிமறித்து நின்றார்கள்.

**3. காட்டிக் கொடுத்தார்கள் (v.14)** - தப்பி ஓடி ஒளிந்துக் கொண்டிருந்த இஸ்ரவேலர்களைப் பகைவர்களுக்குக் காட்டிக் கொடுத்தார்கள்.

இத்தகைய கொடுமையான செய்கைகளை ஏதோமியர்கள் கொண்டிருந்தார்கள். "அவர்கள் இருதயம் கொடுமையை யோசிக்கும்" (நீதிமொழிகள் 24:2). அவர்களின் கொடுமையான செய்கைக்கு கடவுளின் மறுமொழி மிகவும் கடுமையானது.

1. ஆஸ்தியில் கைபோட்டவர்களின் அந்தரங்க பொக்கிஷங்கள் முதற்கொண்டு அனைத்தும் கொள்ளையடிக்கப்படும் (v.5)

2. தங்கள் எல்லைகளில் வழிமறித்து நின்றவர்கள், அவர்கள் ஸ்தானத்திலிருந்து துரத்தப்படுவார்கள் (v.7)

3. கொலை செய்யப்படும்படிக்கு காட்டிக் கொடுத்தவர்கள் கொலைச் செய்யப்படுவார்கள் (v.9)

சகோதர அன்பிலே தவறிய ஏதோமியர்கள் பின்பு பாபிலோனியர்களால் மேற்கொள்ளப்பட்டனர் (v.7). தங்கள் ஸ்தானத்தை விட்டுத் தப்பி ஓடியவர்கள் பின்பு இஸ்ரவேலின் தென்பகுதியில் 'இதுமேயர்' என்ற பெயரோடு குடியேறினர். இதுமேயனாகிய ஏரோது வம்சம் வந்த அகிரிப்பா ராஜாவிற்கு வாரிசு இல்லாததினால் ஏதோம் வம்சம் முற்றிலுமாக சங்கரிக்கப்பட்டு முடிவிற்கு வந்தது (v.10).

**பிரியமானவர்களே! சகோதர அன்பிலே நாமும் குறைவுப்பட்டிருக்கிறோமா? ஏதோமியரின் முடிவை நினைத்துக் கொள்ளுங்கள். ஒருவேளை குறைவுப்பட்டிருப்போமானால் இந்த தவக்காலத்திலே அதைச் சரி செய்துக் கொள்ள தீர்மானிப்போம். "சகோதரன் மீது அன்பு செலுத்தாத கிறிஸ்தவன், தேவனின் பார்வையில் ஏதோமியனாய் அழிவான்" என்பதே நிதர்சனமான உண்மை.**

**"சகோதர சிநேகம் நிலைத்திருக்கக்கடவது" (எபி. 13:1)**



# வாசற்படியில் ஆசாரியன்

வாசற்படியில் ஆசாரியன், “ஆசாரியன் வீட்டைவிட்டுப் புறப்பட்டு வாசற்படியிலே வந்து, வீட்டை ஏழுநாள் அடைத்துவைத்து” (லேவி. 14:38) என்ற தேவனுடைய வார்த்தையைக் குறித்து சற்று ஆராய்ந்துப் பார்ப்போம். ஐந்து ஆகமங்களில் இது 3வது புத்தகம். இதில் கானான் தேசம் சென்றபின்பு எவ்வாறு வாழவேண்டும் என்ற வழிமுறைகளையும், வாழ்க்கை முறைமைகளையும் சட்டத்திட்டங்களாக வறையறுக்கபட்டிருக்கிறது. ஆகவேதான் யூதர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு தங்கள் கரங்களால் எழுதி கொடுக்கும் மிக முக்கியமான அன்பின் பரிசு லேவியராகமம் என்ற புத்தகம். இது தேவனுக்கு ஏற்றபடி நமக்கு வாழ கற்றுக்கொடுக்கிறது.

லேவியராகமம் 14ஆம் அதிகாரம் முழுவதும், குஷ்டரோகம் ஒரு நபரை பாதித்துவிட்டால் அந்த நபர் செய்யவேண்டிய நிவாரண முறைமைகளைக் குறித்து நமக்கு விவரிக்கிறது. தொழுநோயைக் கண்டறிவதற்கான சட்டங்கள் லேவி. 14:33-55இல் கொடுக்கப்பட்டுள்ளன. தொழுநோய் என்பது பூஞ்சை அல்லது அழுகலின் காரணமாக இருக்கலாம். ஆசாரியன் உள்ளே செல்வதற்கு முன்பு உள்ளிருப்பவைகள் அசுத்தமில்லாதபடிக்கு வீட்டைச் சுத்தம் செய்ய வேண்டும் (லேவி. 14:36-38). முதலில் குஷ்டம் பாதிக்கப்பட்ட வீட்டில் கற்கள் மட்டுமே அகற்றப்பட்டன. ஆனால் தொழுநோய் தொடர்ந்து பரவினால், வீடு முழுவதும் இடிக்கப்பட்டு அக்கற்கள் பாளையத்துக்கு புறம்பே கொட்டப்படவேண்டும் (லேவி. 14:45). ஒரு வீட்டில் தொழுநோய் (பூஞ்சை) பற்றி கொண்டால், ஆசாரியர்கள் ஒரு தொழுநோயாளியைச் சுத்திகரிப்பு செய்யும் அதே முறைமைகளைப் பின்பற்றினார்கள் (லேவி. 14:48-51).

தொழுநோயின் தன்மைகள் (Leprosy)

ஒருவருக்கு தொழுநோய் ஏற்பட்டால் அது 3 விதமான பாதிப்பை ஏற்படுத்தும். 1. உணர்ந்து அறிந்து கொள்ளும் தன்மையை அழிக்கும் (Senses destroyed - numbness) 2. உள்ளாக அழுகி, நாற்றமெடுக்கும் தன்மையைக் கொடுக்கும் (Stinking ' rotting) 3. உயிரை கொஞ்சம் கொஞ்சமாக அழிக்கும் (Slowly leads to death). தனி மனிதன் இந்நிலைக்கு தள்ளப்படாமலிருக்க செய்யவேண்டிய நான்கு காரியங்களைப் பார்ப்போம்.

***1. உணர்ந்தறிந்து செயல்படுவது (Infected person should know):*** தொழுநோயின் தன்மையே உணர்வின்மை. அதை அறிந்தும் செயல்படாமலிருந்தால் குணமடைவது மிக கடினம். ஒரு தொழுநோய் வந்தவன் உடனே அதை உணர்ந்தறிந்து சரிசெய்ய எப்படி செயல்படுவானோ, அதேபோல ஆவிக்குரியவர்கள் தன்னை தற்பரிசோதனைச் செய்துக்கொண்டு பாவத்தினால் பாதிக்கப்பட்டதை அறிந்து அதை சரிசெய்ய நமது பிரதான ஆசாரியனாகிய இயேசு கிறிஸ்துவிடம் தன்னை ஒப்புக்கொடுக்க வேண்டும். குற்ற உணர்வு, பாவ உணர்விலிருந்து வெளிவர மன்றாடவேண்டும். தேவன் இஸ்ரவேலின் பாவத்தைக் குறித்து “உணர்வில்லாத ஜனங்கள் அதினால் சிக்குண்டு விழுவார்கள்” (ஓசியா 4:14) என்று கூறுகிறார். இந்த லெந்து காலங்களில் உணர்ந்தறிந்து செயல்பட்டு, பாவத்திலிருந்து வெளிவர (Come out from sin) நாம் அழைக்கப்படுகிறோம்.

***2. உடனே செயல்படுவது (Immediate in action):*** தொழுநோய் என்று அறிந்ததும் உடனே செயல்படுவதும், குணமடைவதும் மிக மிக அவசியம். அதற்கான பரிகாரத்தைத் தேடி அதற்குரிய நிவாரணமுறைகளைச் செயல்படுத்த வேண்டும். “கர்த்தாவே, என் கூப்பிடுதல் உமது சந்நிதியில் வருவதாக; உமது வசனத்தின்படியே என்னை உணர்வுள்ளவனாக்கும்” என்று சங்கீதம் 119:169இல் வாசிக்கிறோம். சங்கீதம் 51இல் தாவீது தனது பாவத்தை முழுவதும் அறிக்கையிட்டு கதறுவதைப் பார்க்கிறோம். அவருடைய வசனமே நம்மை உணர்வுள்ளவர்களாக்கும். வேத வசனத்தின் மூலம் அடிக்கடி கடிந்துக் கொள்ளப்படும்போது உடனே மனம்திரும்ப வேண்டும். இல்லாவிட்டால் சடுதியில் நாசமடைவோம் என்று வேத வசனம் நம்மை எச்சரிக்கிறது. நம்முடைய பாவங்களைக் கண்ணீரோடு அறிக்கையிட (Cry out for the Sin) நாம் அழைக்கப்படுகிறோம்.

***3. உடனே ஆசாரியனை அழைப்பது (Invite the priest to inspect):*** தொழுநோயானது கண்டறியப்பட்டவுடன் ஆசாரியனை அழைத்து அதைப் பரிசோதிப்பதைக் குறித்து லேவியராகமம் 14ஆம் அதிகாரத்தில் முதல் பகுதியில் எழுதப்பட்டுள்ளது. சங். 139:23-24இல் தாவீது “தேவனே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; வேதனை உண்டாக்கும் வழி என்னிடத்தில் உண்டோ என்று பார்த்து, நித்திய வழியிலே என்னை நடத்தும்” என்று கூறுவதுபோல ஆவிக்குரிய வாழ்விலும், நம்முடைய பிரதான ஆசாரியனாகிய இயேசுவிடம் நம்முடைய பாவத்தை அறிக்கையிட்டு (Confess the Sin), அதைப் பரிசோதனைச் செய்து சரி செய்துக் கொள்வது மிகவும் அவசியம். “தேவனைத் தேடுகிற உணர்வுள்ளவன் உண்டோ என்று பார்க்க, தேவன் பரலோகத்திலிருந்து மனுபுத்திரரைக் கண்ணோக்கினார்” (சங். 53:2).

***4. உடன்பட்டு குணப்படுவது (Involved to Heal):*** “உம்முடைய சாட்சிகளின் நீதி என்றைக்கும் நிற்கும்; என்னை உணர்வுள்ளவனாக்கும், அப்பொழுது நான் பிழைத்திருப்பேன்” என்று சங். 119:144இல் வாசிக்கிறோம். தொழுநோயால் அசுத்தமாக இருந்தவர்கள், சுத்திகரிக்கப்பட்டு குணப்படவே பாவநிவாரண பலியின் மூலம் மீட்கப்படுவதற்கான வாய்ப்பு நமக்கு வழங்கப்பட்டது. அதேபோல், இயேசு சிலுவையில் தன்னைப் பலியிட ஒப்புக்கொடுத்து தன்னுடைய இரத்தத்தைச் சிந்தியதால், நாம் கழுவப்பட்டு மீட்கப்பட்டுள்ளோம். நாம் யாவரும் இனி குணப்பட்டப் பாவிகளாக, மன்னிக்கப்பட்டவர்களாக வாழ்ந்திட தேவன் நம்மையும் அழைக்கிறார்.

கிறிஸ்துவினால் கழுவப்பட்ட நாம் ஒவ்வொருவரும் உணர்வடைந்து, செயல்பட்டு, ஆசாரியனை அழைத்து குணமாகிவிட அழைப்பு இருந்தாலும், தெரிந்தெடுப்பு என்பது நமது கையில் தான் உள்ளது. நாமாக உணராமல், அவரை அழைக்காமல் குணப்படுவது மிகக்கடினம். ஆண்டவரே எனக்கு உணர்வுள்ள இருதயத்தையும், சிந்தையையும் தாரும் என தேவனிடம் கேட்டு, ஆவிக்குரிய வாழ்வில் அநேகரைக் குணப்படுத்தும் ஆசாரியத்துவ பணியைச் செய்ய தேவன் நம்மை அழைக்கிறார். இப்பணியைச் செய்ய இன்றே நம்மை அர்ப்பணிப்போமா? கர்த்தர்தாமே நம்மனைவருக்கும் உதவுவாராக.

Mr. SM Cymer Selwyn

# தீய ஒழுக்கங்களும், நல்லொழுக்கங்களும்

## (Vices Vs Virtues)

நாம் எப்படி வாழ்கிறோம் என்பதற்கு 2 அடிப்படை காரணிகள் உள்ளது. E.g. சங்கீதம் 1இல் நன்மை / தீமை, துன்மார்க்கன் / நீதிமான், பாவி / பரிசுத்தம், பரியாசம் / பக்தி போன்ற இருவழி நிலைப்பாட்டை எடுத்துரைக்கிறது. இதில் இரண்டு நிலைப்பாட்டைக் கொண்டவர்களின் தர்க்கமும், அதன் முடிவும் தெளிவுப்படுத்தப்படுகிறது. அது நன்மையாக முடியலாம் அல்லது தீமையாக முடியலாம். ஆனால் இந்த இரண்டும் ஒரு நாளும் ஒன்றாகப் பயணிக்கவே முடியாது. இதில் நாம் எதை செயல்படுத்த வேண்டும் என்று தீர்மானிக்கிறோமோ, அதுவே நம் பழக்கவழக்கமாகின்றது. எனவே முடிவுகளை எடுக்க எப்பொழுதும் எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும்.

*"The word virtue is a good habit consonant with our nature" - St. Augustine*

தீமை செய்ய கற்றுக் கொடுக்க வேண்டியதில்லை. ஏனென்றால் நாம் வாழும் உலகின் சூழலும், நம் சுபாவமும் அதுவாகவே இருப்பதால் நமக்கு பயிற்சியும், அனுபவமும் தேவையில்லை. ஆனால் நன்மைச் செய்ய நல்ல அனுபவங்களும், நல்ல முன் உதாரணங்களும் மிக அத்தியாவசியமாக இருந்து நம்மை உந்துதல்படுத்துகின்றது. இதற்கு பயிற்சியும், நல்ல அனுபவமும் தேவை. தீமைகளை நல்லொழுக்கங்களால் எதிர்கொள்வதன் மூலம் தீமைகளை அழிக்க முடியும். நாம் நன்மையை நோக்கி ஓடும்போது தீமைக்கும், நன்மைக்குமிடையே உள்ள தூரம் அதிகமாகி விலகிச் செல்லும்.

இருதயத்தில் எழும் ஒழுங்கற்ற உணர்ச்சிகளைக் குறித்தும், அதை அடையாளம் கண்டு மேற்கொள்வதைக் குறித்தும் மாற்கு 7:14-23 நமக்கு விளக்குகிறது. ஒழுங்கற்ற முறையில் உணர்ச்சிகளைப் பின்பற்றுவதன் விளைவுகளை ரோமர் 1:14-32, கலா. 5: 19-26, 2 பேதுரு 2, 3 போன்ற அதிகாரங்கள் நமக்கு சுட்டிக்காட்டுகின்றன. இவைகள் மாம்ச சிந்தையுடையவைகள். ஆதலால் உலகப் பிரகாரமானவைகள் மற்றும் மண்ணுக்குரியவைகளை அன்பின் வழியிலும், ஆவியின் வழியிலும் ஒழுங்குப்படுத்தி நம்மால் ஜெயம் பெற முடியும். சங்கீதம் 144:14 என்ற வசனத்தின்படி சத்துரு உட்புகுதல் இராது.

| | தீய ஒழுக்கங்கள் (VICES) | நல்லொழுக்கங்கள் (VIRTUES) |
|---|---|---|
| 1. | இது எப்போதும் எதிர்மறையான குணநலன்களைக் கொண்ட பழக்கவழக்கங்களாகும் | கடவுளின் சுபாவத்தை பிரதிபலிக்கும் பழக்க வழக்கங்களாகும் |
| 2. | சிந்தனை மற்றும் செயலின் அழுத்தம் அதிகமாகும் | இது கிருபையை நமக்கு அதிகம் பெற்றுத்தரும் |
| 3. | பெருமை, பொறாமை, எரிச்சல், கோபம் மற்றும் துர்இச்சை போன்றவை மேலோங்கும். கலா. 5: 19-21 | ஆவியின் கனிகளாக மாறி ருசி கொடுக்கும் (கலா. 5:22, 23) |
| 4. | இது வெற்றிடத்தையும், உடைந்த உறவுகளையும் உண்டாக்கும் | கிறிஸ்தவ ஜீவியத்தின் அடிப்படையாக இருந்து உறவுகளை இணைக்கும் |
| 5. | கடவுளிடமிருந்தும், அவருடைய வழிகளை விட்டும் நம்மை விலக்கும் | நல்வாழ்வின் நன்மைக்கும், நீதியான வாழ்விற்கும் வழி வகுக்கும் |
| 6. | மாம்ச கிரியையானதால் மரணத்தை விளைவிக்கும் | ஆவியின் கிரியையானதால் ஜீவனைப் பெற்றுத்தரும் |
| 7. | நோக்கங்கள் அனைத்தும் தீயவைகள் (Deadly vices) மாற்கு 7:20-23) | கனி நிறைந்த வாழ்விற்கும், முதிர்ச்சிக்கும் வழி வகுக்கும் (Godly Virtues) |
| 8. | பூமிக்குரிய இயல்புடையதால் இம்மையோடு செயலிழந்துவிடும் | பரலோக நிலைவாழ்வு வரைக்கும் நம்மை வழி நடத்தும் |
| 9. | திருப்தி அடையாத மனநிலையும், தீராத சுயநலமும் மற்றும் தேவ சித்தத்திற்கு எதிராகவே இருக்கும் | தேவசித்தமே என்ற தெளிந்த சிந்தையோடு பயணிக்கும் சுபாவம் |
| 10. | சத்தியத்தை அறிய விரும்பாது | சத்தியத்தை அறியும் ஆவலோடு முன்னேறிச் செல்லும் |

பிரியமான வாலிப பிள்ளைகளே!

நலமானதும், பொல்லாங்கும் நம் மனதிலிருந்தே தோன்றுகிறது. எதை நாம் விரும்புகிறோமோ அதுவே நம்மில் மேலோங்கி வளர்கிறது. ஆதலால் எது நலம் பயக்கும் என்பதைப் புரிந்து, நல்லொழுக்க சிந்தனைகளை மட்டும் நாம் எடுத்துச் செல்வோம். நம் ஆண்டவர் நம்மை நன்மையினால் நிரப்புவாராக. ஆமென்!

**"நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு"**
**(ரோமர் 12:21)**

Rev. Daniel Gnanapragasam



# போதனை ஊழியம்

Mr. Israel Nathaniel Edward



'ஊழியம்' (கிரேக்க மொழியில் Diakonia) என்ற சொல்லுக்கு பரிசுத்த ஆவியின் பெலத்தால் மற்றவர்களுக்கு சேவைச் செய்வது என்று பொருள். ஏற்கனவே தெரிவித்திருந்தபடி, இந்த ஆண்டு முழுவதும், நான்காவது வார செய்திகளில், ஆதித்திருச்சபையை (தோராயமாக கி.பி 100 வரை இருந்த) நமக்கு மாதிரியாக வைத்து, அக்காலத்து கிறிஸ்தவர்கள் ஒருவருக்கொருவர் எவ்வாறு ஊழியம் செய்தனர் என்பதைக் கற்றுக்கொள்ளப் போகிறோம்.இந்த வாரம் நாம் போதனை ஊழியத்தைக் குறித்து பார்க்க இருக்கின்றோம்.

ஆதித்திருச்சபையின் ஊழியங்களைக் குறித்த ஆராய்ச்சியை, நற்செய்தியைப் பறைசாற்றும் ஊழியத்துடன் நாம் தொடங்கினோம். இவ்வூழியம், ஊழியங்களுக்குள் முதன்மையான இடத்திலிருப்பதால், ஊழியப்பட்டியல்களில் அப்போஸ்தலர் முதலிடத்தைப் பெற்றுள்ளார்கள் (1 கொரி. 12:28, எபே. 4:13). இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியால் சந்திக்கப்படாதவர்களைச் சந்திக்க அனுப்பப்பட்டவர்கள் தான் அப்போஸ்தலர்கள். நற்செய்தி அறிவிப்பதின் ஒரே நோக்கம் சீடர்களை உருவாக்குவதே (மத். 28:19). நாம் எப்படி சீடர்களை உருவாக்க முடியும்? இயேசு என்ன சொன்னார்? தாம் கட்டளையிட்ட யாவையும் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள் என்றார் (மத். 28:20). எனவே, நற்செய்தியை மக்கள் ஏற்றுக்கொள்ளும்போது, போதனை ஊழியம் உடனடியாகத் தொடர்வதை நாம் காண்கிறோம். இதை நிறைவேற்றுவதற்காக நம்முடைய கர்த்தராகிய இயேசு திருச்சபையில் போதகர்களை நியமித்துள்ளார். அதனால்தான், முன்பு குறிப்பிடப்பட்ட ஊழியங்களின் இரண்டு பட்டியல்களிலும் போதகர்களைப் பார்க்கிறோம்.

யோவான் 4ஆம் அதிகாரத்தில், சமாரிய பெண் இயேசு தனது கடந்தகால மற்றும் நிகழ்கால வாழ்க்கையைப் பற்றி தமது தெய்வீக ஞானத்தின் மூலம் சொன்னப் பிறகு, அவர் அறிவித்த நற்செய்தியை நம்பினாள் (யோவான் 4:17-18). இது உடனடியாக அந்தப் பெண்ணை சமாதானத்தின் தூதராக மாற்றவே, அவள் தனது கிராமவாசிகளை இயேசுவிடம் அழைத்து வந்தாள். இயேசு என்ன செய்தார்? அவர் அவர்களுடன் இரண்டு நாட்கள் தங்கி, அவர்களுக்குக் கற்பித்தார். இது அந்த கிராம மக்களை அவருடைய சீடர்களாக மாறத் தூண்டியது (யோவான் 4:42). இயேசு பரலோகத்திற்கு ஏறிய பிறகும், அதே முறை பின்பற்றப்பட்டது. பெந்தெகொஸ்தே நாளில், சுமார் மூவாயிரம் பேர் நற்செய்தியை ஏற்றுக்கொண்டனர் (அப். 2:41). உடனே அவர்கள் எருசலேம் ஆலயத்திலும், வீடுகளிலும் ஒவ்வொரு நாளும் கூடிவந்து, அப்போஸ்தலர்களின் போதனைகளைக் கற்றுக்கொள்வதற்கு தங்களை அர்ப்பணித்தனர் (அப். 2:42, 46). பவுலும், வீடுகளிலோ அல்லது சிறு குழுக்களிலோ உள்ள விசுவாசிகளுக்கு கற்பிக்க அதே மாதிரியைப் பின்பற்றினார் (அப். 11:26, 16:13, 18:7, 20:7, 20).

## அவர்கள் என்ன கற்றுக்கொடுத்தார்கள்?

போதகர்கள் அப்போஸ்தலர்களின் போதனைகளைப் புதிய விசுவாசிகளுக்கு கற்பித்தனர். இது புதிய ஏற்பாட்டு நிருபங்களில் தெளிவாக எழுதப்பட்டுள்ளது. முதலில் அவை இயேசு கிறிஸ்துவின் போதனைகளாக இருந்தன. பின்னர், நிருபங்கள் மூலம் அவற்றுக்கு எழுத்து வடிவம் வழங்கப்பட்டது. எபிரேயருக்கான கடிதத்தின் ஆசிரியர் இந்த போதனைகளை மூல உபதேச வசனங்கள் என்று அழைத்து, அவற்றைப் பின்வருமாறு பட்டியலிட்டார்: கிறிஸ்துவைப் பற்றிய போதனை, மனந்திரும்புதல், நம்பிக்கை, ஞானஸ்நானம், பல்வேறுப் பொறுப்புகள், இறந்தவர்களின் உயிர்த்தெழுதல் மற்றும் நித்தியத் தீர்ப்பு (எபி. 6:1-2). யூதா இதை "பரிசுத்தவான்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட விசுவாசம் அல்லது சத்தியங்களின் தொகுப்பு" என்றார் (யூதா 3). இந்த போதனைகள் விசுவாசிகளைக் கிறிஸ்து இயேசுவில் வேரூன்றி கட்டமைக்கப்பட்டு, தங்கள் விசுவாசத்தில் உறுதியாக இருக்கவும், நன்றியால் நிரம்பி வாழ்வதற்கும் உதவின (கொலோ. 2:7).

அப்போஸ்தலர்கள் அனைவரும் போதிப்பதற்கு ஒரே மாதிரியைப் பின்பற்றினர். நிருபங்கள் காண்பிப்பது போல, அவர்கள் கிறிஸ்துவின் பண்புகளையும், அவரது ஊழியத்தையும் மற்றும் இரட்சிப்பின் அடிப்படை அம்சங்களையும், பின்னர், கிறிஸ்தவ வாழ்வின் நெறிமுறைகளையும் விளக்கினர். தொடர்ந்து கீழ்ப்படிதலின் மூலம் பரிசுத்தவான்கள் நீதிக்குத் தங்களை முழுவதும் அர்ப்பணிக்க இந்த கற்பித்தல் முறை உதவியது (ரோமர் 6:17-18). மேலும் இது பரிசுத்த வாழ்வை நடத்த அவர்களுக்கு உதவியது (ரோமர் 6:22). இந்த தொடர்ச்சியான பரிசுத்தமாகுதல் ஒருவரை நம் கர்த்தராகிய இயேசுவின் சாயலுக்கும், முதிர்ச்சிக்கும் ஒத்தவராக வளர உதவுகிறது (ரோமர் 8:29, எபேசியர் 4:13).

மேலும், இந்த போதனை விசுவாசிகள் பொய்யான போதனைகளைப் புரிந்துகொள்ள உதவியது. இவ்வாறு அவர்கள் மனித பாரம்பரியத்தையும், உலக வழக்கங்களையும் அடிப்படையாகக் கொண்ட வெறுமையான மற்றும் ஏமாற்றும் தத்துவங்களிலிருந்து தங்களை விலக்கிக் காத்துக்கொண்டனர் (கொலோ. 2:8, எபே. 4:14). எனவே, இந்த போதனைக்கு இரண்டு தனித்துவமான நிலைகள் உள்ளன. ஒன்று புதிய விசுவாசிகளை விசுவாசத்தில் வேரூன்றச் செய்தல். இரண்டு,

தவறான போதனைகளால் ஈர்க்கப்படாமல், அவ்வப்போது கொடுக்கப்படும் அறிவுரைகள் மூலம் பரிசுத்தமாகுதலில் வளர அவர்களுக்கு உதவுதல்.

### யார் போதித்தனர்?

அப்போஸ்தலர்களும், சுவிசேஷகர்களும் கற்பிக்கும் செயல்முறையைத் தொடங்கினர். மேய்ப்பராயிருந்த போதகர்கள் விசுவாசிகளுக்கு உபதேசிக்க அவர்களைப் பின்தொடர்ந்தனர் (எபே. 4:13). அப்போஸ்தலனாகிய பவுல், “நான் விதைத்தேன்; அப்பொல்லோ அதற்குத் தண்ணீர் ஊற்றினார்” என்றார் (1 கொரி. 3:6). உள்ளூர் சமூகத்தைச் சேர்ந்த கற்பிக்கும் திறன்பெற்ற மூப்பர்கள், ஒவ்வொரு திருச்சபையையும் கவனித்துக்கொள்ள நியமிக்கப்பட்டனர் (1 தீமோ. 3:2, 2 தீமோ. 2:2). கணவர்கள் கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றி தங்கள் மனைவிகள் பரிசுத்தமாகவும், குற்றமற்றவர்களாகவும் மாறும்வண்ணம் கற்பிக்கக் கடமைப்பட்டிருந்தனர் (1கொரி. 14:35, எபே. 5:25-27). கர்த்தருடைய போதகத்தின்படி பிதாக்கள் தங்கள் பிள்ளைகளுக்கு உபதேசித்து, அவர்களைப் பயிற்றுவிக்க வேண்டியதாயிருந்தது (எபே. 6:4).

### நாம் என்ன செய்ய வேண்டும்?

ஒரு சீடரை இயேசு கிறிஸ்துவின் உண்மையான சாட்சியாக மாற்றுவதில் போதனை ஊழியம் முக்கிய பங்கு வகிக்கிறது என்பதை மேலே உள்ள விவாதத்திலிருந்து நாம் புரிந்துக் கொள்ளலாம். தேவன் தமக்கு முன்பாக நாம் பரிசுத்தராயும், குற்றமற்றவர்களாயும் இருக்க, நம் ஒவ்வொருவரையும் உலகம் உண்டாவதற்கு முன்னரே தெரிந்துகொண்டார் (எபே. 1:4). தேவனுடைய வார்த்தையைப் போதிப்பதொன்றே இதை நிறைவேற்றுகிறது (யோவான் 17:17, 1பேதுரு 2:3). மேலும், மதகுருமார்கள் மட்டுமல்ல, சாதாரண மக்களும் மூப்பர்களாகவும், கணவர்களாகவும், தந்தைகளாகவும் கற்பிப்பதில் முக்கிய பங்குவகிப்பதை நாம் காணலாம். எனவே, இந்த ஊழியத்தை நிறைவேற்ற, முதலில் நாம் நமது விசுவாசத்தின் மூல உபதேசங்களை முழுமையாக அறிந்து புரிந்துக் கொள்ள வேண்டும். இரண்டாவதாக, தேவன் வாய்ப்புகளை வழங்கும் இடங்களில் அதாவது நம் வீடுகளில் அல்லது ஜெபக்குழுக்களில் அல்லது நமது தேவாலயங்கள் மற்றும் பணியிடங்களிலுள்ள குழுக்களில் இந்த ஊழியத்தை நாம் நிறைவேற்ற வேண்டும். அன்பிலும், நற்கிரியைகளிலும் ஒருவரையொருவர் ஊக்குவிப்பதற்கான அசைக்க முடியாத ஆர்வத்தை நாம் கொண்டிருக்க வேண்டும் (எபி. 10:24). இது நித்திய ஜீவனுக்கான பாதையில் உறுதியுடன் முன்னேற நமக்கு உதவும் (1 தீமோ. 4:16).





# பள்ளத்தாக்கு வாசல்

## *The Valley Gate*



Rev. Prabakara Sarathy

வாசல்களைப் பழுதுபார்க்கும் பணியில், நெகேமியாவின் புத்தகம் நான்காவது வாசலை ''பள்ளத்தாக்கு வாசல்' என்று பதிவுச் செய்கிறது, இது புதுப்பித்தலுக்கு உட்பட்டது.

**பள்ளத்தாக்கு வாசலின் பொருள்:**

இது கர்த்தரின் கிருபையால் 'வெளியேற்றப்பட்டது' அல்லது 'நரக நெருப்பிலிருந்து பறிக்கப்பட்டது' என்று வரையறுக்கிறது. மேலும், இது துன்பம் மற்றும் சுத்திகரிப்பின் பள்ளத்தாக்கை (வேறு வார்த்தையில் 'கிட்ரான் பள்ளத்தாக்கு) வெளிப்படுத்துகிறது. பள்ளத்தாக்கின் வாசல் அழிக்கப்பட்டது, ஆனால் அதன் அர்த்தம் அப்படியே இருந்தது. வாசலின் நோக்கமாக 'மொத்தமாக எரிக்கப்பட்டதிலிருந்து பறிக்கப்பட்டது' மற்றும் 'சுத்திகரிப்பு' என்று அது தெரிவிக்கிறது. இது பள்ளத்தாக்கிலுள்ள துன்பங்கள், கடினமான சூழ்நிலைகளை வெளிப்படுத்துகிறது. இருப்பினும், கர்த்தர் மக்களோடிருந்து அவர்களை காப்பாற்றினார். இஸ்ரவேலர்கள் வாக்களிக்கப்பட்ட தேசத்திற்கு செல்ல வனப்பகுதியைக் கடக்கும்போது பல பாடுகளையும், துன்பங்களையும் அனுபவித்தனர். ஆனால் கர்த்தர் அவர்களின் எல்லா துன்பங்களிலிருந்தும் அவர்களை மீட்டெடுத்தார்.

**பள்ளத்தாக்கு வாசலின் இருப்பிடம்**

தொல்பொருள் சான்றுகள் மற்றும் நெகேமியா புத்தகத்தின் பதிவுகளின் படி, பள்ளத்தாக்கு வாசல் ஏரோதின் அரண்மனைக்கு அருகிலிருந்தது. இது எருசலேமின் கிழக்குப் பகுதியிலுள்ள கோயில் மலைக்கும், ஒலிவ மலைக்கும் இடையில் அமைந்திருக்கிறது. வேதாகமத்தில், இயேசு கிறிஸ்துவின் துன்பங்கள் மற்றும் பாதைகளின் அர்த்தம் ஏரோதின் அரண்மனையில் இருந்தது. துன்பத்தின் மத்தியிலும், மனிதர்களின் பாவங்களைப் போக்குவதற்காக பிதாவாகிய கர்த்தர் இயேசு கிறிஸ்துவுடன் இருந்தார்.

**பள்ளத்தாக்கு வாசலின் பழுதுபார்க்கும் பணிகள்** (The repair work of the Valley Gate)

பள்ளத்தாக்கு வாசலை ஆனூன் பழுது பார்த்ததாக நெகேமியாவின் புத்தகம் கூறுகிறது. மேலும், சானோவாகில் வசித்து வந்த சிலர் பள்ளத்தாக்கின் வாசலைப் புதுப்பிப்பதில் ஈடுபட்டனர். உலோகப் பலகைகள் மற்றும் கம்பிகளைக் கொண்டு கதவுகளைச் சரிசெய்ய அவர்கள் பங்களித்துள்ளனர்.

**பள்ளத்தாக்கு வாசலின் நோக்கம்** (The purpose of the Valley Gate)

ஹின்னோம் பள்ளத்தாக்கு தீர்ப்பு மற்றும் தீ மூலம் அழிவுக்கு பெயர் பெற்றது. இந்த பள்ளத்தாக்கின் ஒரு பகுதியில் ஒரு குப்பைத் தொட்டியில் இறந்த உடல்கள் மற்றும் குப்பைகள் இருந்தது. இந்த குப்பைகளை எரிப்பதற்காக தீ இரவும் பகலும் எரிக்கப்பட்டது. பள்ளத்தாக்கு வாசல் இந்த பள்ளத்தாக்கின் நுழைவுவாயிலாக இருந்தது, மக்கள் தங்கள் குப்பைகளை இந்த பள்ளத்தாக்குக்கு எடுத்துச் சென்று அங்கு எரிப்பார்கள்.

**பள்ளத்தாக்கு வாசலின் ஆவிக்குரிய அர்த்தம்** (The Spiritual meaning of the Valley Gate)

நகரத்தைத் தூய்மைப்படுத்த தவிர்க்க முடியாத வாயிலாக இந்த வாசலுள்ளது. பள்ளத்தாக்கில் தேவையற்ற குப்பைகள் மற்றும் இறந்த உடல்கள் எரிக்கப்பட்டன. நகர மக்கள் பள்ளத்தாக்கில் எரிக்க வேண்டிய தேவையற்ற அல்லது பயன்படுத்தப்பட்ட பொருட்களை எடுத்துச் செல்ல அந்த வாசலைப் பயன்படுத்தினர். எரிப்பு ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் வெளிப்படையான அனுபவமாகும். இது எரியும் ஒரு நேரடி நெருப்பு அல்ல, ஆனால் பரிசுத்த ஆவியானவர் மூலம் நம் ஆத்துமாவைச் சுத்திகரிப்பதாகும். இறந்த உடல்கள் இந்த வாசல் வழியாக எடுத்துச் செல்லப்பட்டு பள்ளத்தாக்கில் எரிக்கப்பட்டன. இது தீர்ப்பு நாளை நமக்கு நினைவூட்டுகிறது. உயிரற்ற உடல்கள் தங்கள் ஆத்துமாவுடன் திரும்பி வந்து தீர்ப்பு இருக்கைக்கு முன் நிற்கும். பள்ளத்தாக்கு வாசலில் கர்த்தரின் மனதுருக்கத்தை நினைத்துப் பாருங்கள். மக்கள் அழிந்து, தேவையற்ற குப்பைகளாக மாறி வருகின்றனர். ஆனால் அவர்களின் ஆத்துமா ஒருபோதும் அழியாது. ஒன்று அது கடவுளின் இராஜியத்திற்குள் நுழையும் அல்லது தண்டனையாக நரகத்தில் தள்ளப்படும்.

**பள்ளத்தாக்கு வாசல் மற்றும்** FMPB **ஊழியம்** (The Valley Gate and Ministry of FMPB)

ஆத்துமாக்களை அழிவிலிருந்து காப்பாற்றும் பணியில் FMPB இயக்கம் ஈடுபட்டுள்ளது. கிராமங்கள் மற்றும் நகரங்களில் உள்ள மக்கள் கர்த்தரின் இறுதி தீர்ப்பு இன்னும் வரவில்லை என்பதை உணரவில்லை. இயேசு கிறிஸ்துவின் பாடுகளும், தூய்மைப்படுத்தும் ஆவியும் மாத்திரமே இவர்களை நித்திய அழிவிலிருந்து மீட்கும்.

யாராவது ஒருவர் சென்று இயேசுவே உலகின் பாவங்களுக்காக மரித்தார், அடக்கம் செய்யப்பட்டார், மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் என்ற இயேசு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்க வேண்டும். ''நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்'' (1 யோவான் 1:9) என்ற வசனத்தின்படி நம்முடைய பாவங்களை உணர்ந்து அவைகளை அறிக்கையிட்டால் நம்மை மன்னித்து இரட்சிக்க இயேசு வல்லவராயிருக்கிறார்.

**குறிக்கோளும், சவால்களும் உங்கள் முன்** (The Mission and Challenges are before you)

உங்கள் பதில் என்ன? மக்களுடைய கலாச்சார சூழ்நிலைகளில் சென்று நற்செய்தியைப் பிரசங்கிக்க நீங்கள் தயாரா? எரியும் நெருப்பிலிருந்து அழிந்துக் கொண்டிருக்கும் ஆத்துமாக்களைக் காத்து கர்த்தரின் அழிவில்லாத ராஜ்யத்திற்குள் அவர்களை வழிநடத்த முடியுமா?

**அப்படிப்பட்ட ஆத்தும பாரம் கொண்ட உங்களை FMPB வரவேற்கிறது. வாலிப சகோதர, சகோதரிகளே எழும்பி வாருங்கள். உங்களைத் தான் கர்த்தர் தேடுகிறார். கர்த்தருடன் இணைந்து அவருடைய ஊழியத்தைச் செய்ய நீங்கள் தயாரா?**


நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
மே
15-18
இடம்
பெத்தேல்,
சேலம்
செய்தியாளர்கள்
அவர்களிலும் அதிகமாய்
பங்குபெற அழைக்கிறோம்


நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
திருவள்ளூர் மண்டலம் நடத்தும்
அர்ப்பணித்தோர் முகாம் 2025
ஏப்ரல்
13-14
ஞாயிறு மாலை 4.00 மணி முதல்
திங்கள் மாலை 4.00 மணி வரை
செய்தியாளர்கள்
Rev. N. ஆசீர்வாதம்
Mrs. வசந்தி இம்மானுவேல்
இடம்
இறைவனின் தோட்டம்
தரிசனம் பெற்ற வீரனே தரித்து நிற்பது ஏன்?
கரிசனைக் கொண்டவர் அழைக்கிறார்!
கருத்துடன் செயல்பட வா!
தொடர்புக்கு FMPB : 04426852200, 9841936067, 9171123400


நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு
Go or Send
தென் மண்டலம் நடத்தும்
அர்ப்பணித்தோர் முகாம் - 2025
2025
ஏப்ரல்
13 ஞாயிறு
14 திங்கள்
அரசு விடுமுறை
நேரம்
ஞாயிறு மாலை 4.00 மணி முதல்
திங்கள் மாலை 4.00 மணி வரை
இடம்
FMPB
14,1, கார்டன் தெரு,
செயின்ட் தோமஸ் 1-வது குறுக்கு தெரு,
பெருமாள்புரம், திருநெல்வேலி-7.
செய்தியாளர்கள் :
Rev. K. பிரபாகர சாரதி
Rev. G. கிங்ஸ்லி
Mr. S. நத்தானியேல்
அன்புடன் அழைக்கிறோம்
FMPB : 94451 19789, 94443 93228, 94436 94021
90250 78004,62843 82348, 7639656577


YMCA MADRAS
& FMPB
VISION MISSION 25
ஏப்ரல் 14
YMCA AUDITORIUM,
வேப்பேரி
Rev. இம்மானுவேல் ரஞ்சித்சிங் | Dr. சாம் டேனியல்
THEME:
CONNECT WITH GOD'S HEART
18
• பதிவுக்கட்டணம் ரூ. 100/-
9841032224, 9445040148,
9445070330, 9489345491,
தொடர்புக்கு 9445200041, 9444396215, 9941305030
REGISTRATION FORM
Name
Age
Sex ☐ Male ☐ Female
Address
Qualification
Church
Phone number
E-mail ID